விலை சதம்: 25. தொலைபேசி: 23411

சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, ஆடி 30உ (15-8-71) ஞாயிறு ஐ. ஆகிர் பிறை 23 புத்தகம் 25 இதழ் 38

பொதுச் செயலாளர் விளக்குகிறுர்:


தமிழரசுக் கட்சியின்



# அடுத்த நடவடிக்கை என்ன?

"தமிழரசுக்கட்சியின் அடுத்த நடவடிக்கையென்ன என்று தமிழ் இளைஞர்கள் மெத்த ஆர்வத்துடன் கேட்கிறுர்கள். இந்த இளைஞர்களின் தமிழுணர்ச்சியையும் விடுதலை வேட்கையையும் வரவேற்கிறேன். தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஒத்துழையாமை ஒன்

(2-ம் பக்கம் பார்க்க)



## டாக்டர் நாகநாதனுக்கு கடும் சுகவீனம்! தமிழரசுத்தலைவர்கள் சென்றுபார்த்தனர்!

தமிழரசுக்கட்சியின் மூத்ததலைவர்களில் ஒருவரும் இரும்பு மனிதர் என்று இயக்கத் தோழர்களால் அன்புடன் அழைக்கப்படுபவருமான டாக்டர் இ. மு.வி. நாகநாதன் அவர்கள் கடும்சுகவீனம் காரணமாக கடந்த ஒருவாரமாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் 44ம் இலக்க வார்டில் அனுமதிக்கப்பட்டிருக்கிறுர்.

டாக்டரை அவரது குடும்பத்தினர் அருகிலிருந்து கவனித்துவருகின்றனர். தமிழரசுத் தந்தையும், மாற்றுக்கட்சித்தலைவர்களும், கட்சி ஆதரவாளர்களும் அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு சென்று நாகநாதன் அவர்களை பார்த்து வருகின்றனர்.

## காரைநகர் சிவன் கோவிலில் மீண்டும் காவடிப் படம்!

காரைநகர் சிவன் கோவிலில் இடம் பெற்றிருந்த வட்டுக்கோட்டை பா. உ. திரு. ஆ. தியாகராஜாவின் காவடிப்படம், அவரது இன்றைய தமிழ்த் துரோகப் போக்குக் கண்டு பொங்கியெழுந்த அவரது ஆதரவாளர்களாலேயே அடித்து நொருக்கப்பட்ட செய்தியொன்றை 30-7-71 சுதந்திரன் பிரசுரித்திருந்ததை வாசகர்கள் அறிவார்கள்.

ஆனல் கோவிலில் முன்பு படம் இருந்த அதே இடத்தில் தியாகராசாவின் மற்ருெரு காவடிப்படம் மீண்டும் வைக்கப்பட்டுள்ளது கண்டு ஊரிலுள்ள இளைஞர்கள் கொதிப்படைந்துள்ளனர். ஆண்டவன் சந்நிதியில் ஓர் ஐந்தாந்தர அரசியல் வாதியின்—அதுவும் தமிழ்த் துரோகியின்படம் இடம் பெறுவதா என்று கேட்டு ஊரவர்கள் குமுறுகின்றனர்

இது சம்பந்தமாக காரைநகர் சிவன் கோவிலடியைச் சேர்ந்த மாப்பாணன் என்பவர் பின்வரும் கடிதத்தை நமக்கு அனுப்பியுள்ளார்.

"சென்ற வார சுதந்திரன் முதல் பக்க இதழில், காவடிப்படம் அடித்துடைத்து நொருக்கப்பட்டது எனக் குறிப்பிட்டிருந்தீர்கள் ஆனல் அதே மாதிரிப்படம் திரும்பவும் அவ்விடத்தில்மாட்டப் பட்டுள்ளது.

காவடிக்காரரின் (கையால்) காக்காய் பிடிக்கும் வாலிபன் கோவில் முகாமையாளருக்கு காக்காய் பிடித்து

(2ம் பக்கம் பார்க்க)

## குமாரசூரியர் வரவேற்பில் வவுனியா பா. உ. கலந்து கொள்ளார்!

இம்மாதம் 14ந் திகதி தபாலமைச்சர் வவுனியாவில்நடைபெறும், மாகா வித்தியாலயங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறுர். தமிழுக்கு துரோகம் இழைக்கும் அமைச்சருக்கு இது தொடர்பாக அளிக்கப்படும் எந்தவரவேற்பிலும் தாமோ தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டக்கிளையினரோ கட்சி ஆதரவாளர்களோ தமிழ் பற்றுள்ளவர்களோ கலந்துகொள்ளப்போவதில்லை யென்றும், அமைச்சர் விஜயத்தை தாம் முற்ருக பகிஷ்கரிக்கப்போவதாகவும் வவுனியா பா. உ. திரு.செல்லத்தம்பு சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

## பட்டிருப்பு தம்பிராசா அரசியல் குத்துக்கரணம்!

பட்டிருப்பு பா. உ. திரு. தம்பிராசா யூ. என். பி. யிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு குத்துக்கரணமடித்திருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. யூ. என். பி. க்கு காலைவாரிவிட்டு சுதந்திரக் கட்சியில் அவர் சேர்ந்துவிட்டதாகவும் இக்குத்துக்கரணம் விரைவில் பகிரங்கப்படுத்தப்படுமெனவும் சொல்லப்படுகிறது.

இச்செய்திக்கு ஆதாரமாக யூ. என். பி. தலைமைப் பீடத்தை கடுமையாகக் கண்டித்து திரு. தம்பிராசா அண்மையில் வெளியிட்டிருந்த

(2-ம் பக்கம் பார்க்க)

## மார்டினுக்கு டாக்டர் என். எம். எச்சரிக்கை!

"ஒரு கட்சியிலிருந்து இன்னெரு கட்சிக்கு மாறியவர்கள் இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் கசப்பான பாடங்களைப் படித்து வந்திருக்கிறுர்கள். அப்படிப்பட்ட கட்சி மாறிகள் அரசியல் அரங்கிலிருந்தே துரத்தியடிக்கப்பட்டுள்ளதை இன்று காண்கிறேம்"

—டாக்டர் என். எம். பெரேரா (டெயிலி மிரர் 7. 8. 71)

## தமிழர்களுக்கு தலைமைதாங்க ஜீ.ஜீ.க்கு தகுதி கிடையாதாம்!

"தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமிழர்களுக்கு சரியான தலைவரல்லர். தமிழர்களுக்கு தலைமை தாங்குவதற்கு தமக்கு தகுதியில்லை யென்பதை அவரே நிரூபித்துவிட்டார். இப்போது குமார சூரியரே தமிழ்மக்களின் ஒரே இரட்சகர். எங்களுக்கு தகுந்தவழி காட்டி அவரே. குமாரசூரியர் தலைமையில் தமிழ் மக்கள் முன்னேற வேண்டும்."

—யாழ் ஸ்ரீலங்கா சு. கட்சி கூட்டத்தில் வட்டுக்கோட்டை பா. உ. ஆ. தியாகராசா (ஆதாரம்: 7-8-71 டெயிலி மிரர், 9-8-71 வீரகேசரி செய்திகள்.)

## கே. ஆர். ஆர். மறைவு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களில் ஒருவரும் பழம்பெரும் பகுத்தறிவு வாதியும் திரைப்பட நடிகருமான கே. ஆர். ராமசாமி சென்னையில் காலமானுர்.

## 'மனச்சாட்சிக்கு ஒரு மனிதர் தந்தை செல்வா அவர்களே!'

"தமிழினத்தின் நல்வாழ்வுக்காகவும், தமிழ் மொழியின் வளத்துக்காகவும், தன்னுடைய மனச்சாட்சிப்படி அற வழியில் செயல்படும் ஒரேயொரு மனிதர் இருக்கிறுர் என்ருல் அது நமது தமிழரசுத் தந்தை செல்வா அவர்களே. எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும்—தமிழினத்தின் உரிமைப் பிரச்சினைகளில் கட்டுப்பாட்டை மீறி மனச்சாட்சி பற்றிப் பேசுகிறுர்கள் என்ருல் அவர்களிடம் மனச்சாட்சியே இல்லையென்பது தான் பொருள்"



—இவ்வாறு தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. சி. மு. இராசமாணிக்கம் சுதந்திரனுக்கு அளித்த பேட்டியொன்றின்போது அழுத்தந்திருத்தமாக கூறினுர்.

சுறுசுறுப்புடனும், புதிய தெம்புடனும் காணப்பட்ட திரு. இராசமாணிக்கம் மேலும் கூறியதாவது:—

"மனச்சாட்சி யென்பது மனிதருக்கு மனிதர் மாறுபடலாம். ஆனல் தர்மம் எல்லோருக்கும் பொதுவானது. தமிழரசுத்தந்தை அவர்கள் தர்மத்தின் வழியில் தமிழினத்தை அழைத்துச் செல்லுகிறுர், ஏனவே தந்தையின் அரசியல் முடிவுகளே எப்பொழுதும் நீதி

(2-ம் பக்கம் பார்க்க)

## கல்வி மந்திரிக்கு நவரத்தினம் சவால்

"தமிழ்மொழி மூலமான தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் நியமனங்களையிட்டு இளைஞர்கள் இடையேயும் பெற்ருேர்களிடையே பூரணமான அதிருப்தி நிலவுகின்றது. திறமையின் அடிப்படையிலேயே நியமனம் நடைபெறும் என உங்கள் கல்வியமைச்சர் தெரிவித்த உறுதிமொழி மீறப்பட்டுள்ளது. ஆகவே இத்தெரிவு குறித்து விசாரணை நடத்துங்கள்.

'திறமையின் அடிப்படையிலோ அல்லதுவேறு எந்தத் திட்டத்தின் 'அடிப்படை

(2-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# முழுவதும் தணிக்கை!

---

ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டுமானுல் பத்திரிகைகளுக்கும் பூரண சுதந்திரம் இருந்தாகவேண்டும். அதற்கு வாய்ப்பூட்டு போட முனைவது அதர்மமாகும்.

—உதவி கல்வியமைச்சர் பி. வை. துடாவை.
(வீரகேசரி 4-8-71)

## அடுத்த நட . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றைத் தவிர வேறு நேரடி நடவடிக்கைகள் எதிலும் ஈடுபட முடியாமலிருக்கிறது என்பதை ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

கூட்டங்கள் போட்டு மக்களுக்கு அரசியல் நிலையை எடுத்து விளக்கவும் எங்களுக்கு தடைபோடப் படுகிறது. தமிழரசுக் கட்சி சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தப் பிரதமர்வரை அனுமதி கேட்டோம். எல்லோருமே மௌனம் சாதித்துவிட்டார்கள். அதே சமயம் யாழ்ப்பாணத்தில் சுதந்திரக்கட்சி ஒலிபெருக்கி அமைத்து விழா கொண்டாட மட்டும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி பாராளுமன்றத்தில் அவசரகால நிலைபற்றிய விவாதத்தின்போது எமது கட்சிபா. உ.க்கள் கண்டனம் தெரிவிக்க இருக்கிருர்கள்''

—இவ்வாறு காரைநகர் தமிழரசு வாலிபமுன்னணியினர் காரைநகர் சைவ மகாசபை மண்டபத்தில் நடத்திய கருத்தரங்கொன்றில் பேசும்போது தமிழரசுப் பொதுச் செயலாளர் அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

அறிஞர் அண்ணு எவ்வழியில்தமது இயக்கத்தை நடத்திஞரோ அவ்வழியில்தான் நாமும் எமது இயக்கத்தை நடத்துகிறோம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதுதான் எமது இயக்கத்தின் முதற் கொள்கை. நாங்கள் ஒருபோதும் கடமை தவறியதில்லை. கண்ணியத்தை இழந்ததில்லை. அதேநேரத்தில் கட்டுப்பாட்டை மீறியோருக்கு எமது கட்சியில் இடமுமில்லை.

அரசியலமைப்பு சபையினுல் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் நன்மை இல்லையென்பது தெட்டத்தெளிவாகிவிட்டது. தமிழினத்தின் சார்பில் நாம் கொண்டுவந்திருந்த குறைந்தபட்சக் கோரிக்கைகள் அனைத்தையும் நிராகரித்து விட்டனர். 1966ம் ஆண்டு சனவரியில் நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழிப் பிரமாணங்களைக் கூட இப்போதைய அரசாங்கம் அலட்சியப்படுத்துகிறது.

ஏன் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பளிக்கும்வகையில் தற்போதுள்ள 29 வது சரத்தைகூட புதிய அரசியலமைப்பில் இடம்பெறச்செய்ய இன்றைய அரசு முன்வரவில்லை.

எங்கள் கட்சிபா. உ.க்கள் இதுகாலவரை அரச பணிக் கடிதங்களில் தங்கள் பெயரச்சு முத்திரைகளை தமிழிலேயே பொறித்துஅனுப்பிவந்திருக்கிறுர்கள். தமிழ்பெயரச்சு முத்திரை கொண்ட அரச பணிக் கடிதங்களை ஏற்க வேண்டாமென்று தபாலமைச்சு இப்போது உத்தவிட்டுள்ளது. இது இதுகாலவரை இருந்துவந்த உரிமையை பறிப்பதாகும்.

ஒருதமிழமைச்சரின் கீழ் உள்ள நிர்வாகத்திலேயே இவ்வாறு தமிழ்மொழியுரிமை பறிக்கப்படுகிறது. இந்த நிலையில் தமிழ்மக்கள் எவ்வாறு இந்த அரசாங்கத்தை நம்ப முடியும்?

எனவேதான் அரசியல் நிர்ணயசபையில் தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் அங்கம் வகிப்பதில் பய[illegible] நாம் [illegible] உரிமையை அங்கீகரித்திட மறுக்கும் ஓர் அரசியல் நிர்ணய சபையில் தமிழ் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பது தமிழினத்துக்கே இழுக்கு என்ற காரணத்தினுல் அச்சபையிலிருந்து நாம் வெளியேறி விட்டோம். பெரும்பாலான தமிழ்மக்களும் எங்கள் முடிவை ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

சமஷ்டிமூலமாஞலென்ன —தனியாட்சி மூலமாஞலென்ன எங்களுக்குத் தேவைஇனத்தின் விடுதலைதான். எனவே தமிழ்மக்கள் எந்த இயக்கத்தில் இருந்தாலும் தமிழனின் தன்மான உணர்வை வெளிக்காட்டுபவர்களாக இருக்கவேண்டும். தமிழினத்தை அடிமைப்பாதையில் செல்லவிடாது சுதந்திரப் பாதையில் வழிநடத்த வேண்டும். இதுவே எமது கொள்கை.

புதிய அரசியல் சாசனம், தமிழினத்தின் மரண சாசனம். இச்சாசனத்துக்கு ஆதரவாக வெண்கலத் தகட்டில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. தியாகராசா கையொப்பமிடா தபடி இப்பகுதி இளைஞர் அவரைத் தடுக்கவேண்டும்''—இவ்வாறு அமிர்தலிங்கம் கூறினுர்.

## மனச்சாட்சிக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யான முடிவுகளாக இருந்து வந்திருக்கின்றன.

''மனச்சாட்சி என்று கூறிக்கொண்டு ஒவ்வொருவரும் தத்தம் மனம் போனபடி கட்டுப்பாடின்றி செயல்படத்தொடங்கிஞல் ஒரு இனம் எப்படி தலை நிமிர்ந்து வாழ முடியும்? இதை மனச்சாட்சிபற்றிப் பேசுபவர்கள் சிந்திக்கவேண்டும்.

''இன்று மனச்சாட்சி பற்றியும் தமிழர் நலன் பற்றியும் பேசுபவர்கள் தமிழினத்தைப்பற்றி அணுவளவும் சிந்திக்காது, தாமுண்டு, தம்குடும்பமுண்டு என்று வாழ்ந்த காலத்திலேயே— தமிழினத்தைப்பற்றியும், தமிழ் மொழியைப் பற்றியும் சிந்தித்து தமிழ் பேசும் மக்களுக்கு தகுந்த அரசியல் பாதையைக் காட்டியவர் தமிழரசுத்தந்தை அவர்களே. தந்தை காட்டும் பாதையே தமிழர்களுக்கு ஏற்ற பாதையென்பதை ஈழத்தமிழகம் முழுவதும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

''சுயநலவாதிகள், அண்டி வாழ்பவர்கள், எக்கேடு கெட்டாவதுபோகட்டும். தமிழரசுக்கட்சி தமிழினத்தின் தன்மானத்தை காத்து, இழந்த உரிமைகளைப் பெறத் தொடர்ந்துபோராடும்''

## பட்டிருப்பு தம்பிராசா . . .

1-ம் பக்கத் தொடர்ச்சி

அறிக்கையொன்றை அரசியல் வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

தம்பிராசா தமது குத்துக்கரணத்துக்கு போட்டுள்ள கணக்கு இதுதாஞம்!

பட்டிருப்பு தேர்தல் அப்பீல் வழக்கு தம்பிராசாவுக்கு பாதகமான முறையில் அமைந்தால், இடைத்தேர்தலில் சுதந்திரக்கட்சி வேட்பாளராக தாமே போட்டியிடலாமென்றும், அத்தேர்தலில் தோற்ருலும் ஆளுங் கட்சியிடம் மண்டியிட்டு அற்ப சலுகைகளைப் பெறலாமென்றும், சு. கட்சியில் சேர்வதால் எது நடந்தாலும் லாபமே என்றும் தம்பிராசா கருதுகிருராம்!

## காரை நகர்சிவன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படத்தை அதே மாதிரி உருவத்துடன் மாட்டியுள்ளான்: இதற்கு ''கோழிக் குஞ்சு'' ஐயர் ஒருவரும் உடந்தையாக இருந்தார்.

காவடிப் படம் திரும்பவும் மாட்டப்பட்டதை கேள்வியுற்ற அத்திக்கு வாலிபர்கள் கொதித்தெழுந்தார்கள். ஆஞல் பலன் கிடைக்காததால் இனி ''கோவில் பணிவிடைகள்'' செய்வதில்லை என ஒருமுகமாகத்தீர்மானித்துள்ளனர். படம் இருப்பதை வெறுக்கும் அத்திக்கு பெரியோர்களும் அதை அகற்றுவதற்கான ஒழுங்குகள் செய்து வருகின்றுர்கள்.

எனவே கோவில் முகாமையாளர்கள் பலவித இக்கட்டான நிலைக்கு ஆளாகாமல் படத்தை எடுத்து எல்லோரும் ஒற்றுமையாக வழிபடும் இவதலத்தை அசிங்கப் படுத்தாமல் வழிபட ஆவன செய்வார்களாக.

## கல்வி மந்திரிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலோ நியமனங்கள் செய்யப்படவில்லையென்பதை நான் நிரூபிப்பேன். அவ்விதம் நிரூபிக்கத்தவறுவேஞகில் எனது பா. உ. பதவியை ராஜிஞமா செய்வேன். கல்வியமைச்சர் கூறிய உறுதிமொழியின்படி நடக்கவில்லையென்பதை நான் நிரூபித்தால் அவர் தமது பதவியை ராஜிஞமாசெய்ய வேண்டியதே முறையாகும்'.

'அரசாங்கம் நேர்மையுடனும் நியாயத்துடனும் நடந்துகொள்கிறது என்பதை மக்கள் நம்பவேண்டும். ஆதலிஞல் பிரதமர் இவ்விடயமாக நடவடிக்கையெடுத்து ஆவனசெய்யவேண்டும்'

—இவ்வாறு சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் பிரதமருக்கு அனுப்பியுள்ள தந்தியில் கூறியுள்ளார்.

இதுசம்பந்தமாக உடுவில் பா. உ. திரு. தர்மலிங்கம் பிரதமருக்கு அனுப்பியுள்ள தந்திவருமாறு:—

'பாராளுமன்றத்தில் வைத்து கல்வியமைச்சர், ஊர்காவற்றுறை பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கு கொடுத்த உறுதிமொழிப்படி, தராதரப்பத்திரமற்ற ஆசிரியர் நியமனத்தில் தகுதியுள்ளவர்கள் நியமிக்கப்படவில்லை. தகுதியற்றவர்கள் அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். இந்நியமனம் சம்பந்தமாக உடனடியாக ஒரு பூரணவிசாரணை நடத்துங்கள்.'

### பண்டிதர் தந்தி

'ஆசிரியர் பற்ருக்குறை இல்லாத வட்டுக்கோட்டைத் தொகுதியிலிருந்து 36 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அதேசமயத்தில், யாழ்குடாநாட்டில் ஆசிரியர் பற்ருக்குறை அதிகமாக உள்ள ஊர்காவற்றுறைத் தொகுதியிலிருந்து 28 பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருப்பது அநீதியானது. எனவே ஊர்காவற்றுறையிலிருந்து இன்னும் 25 பேரையாவது திறமை அடிப்படையில் நியமனம் செய்யுங்கள்.'

—இது கல்வியமைச்சருக்கு பண்டிதர் இரத்தினம் அனுப்பியுள்ள தந்தியாகும்.


''முயற்சி யுடையவன் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் எதை வேண்டுமானுலும் பெறலாம்.''

—தர்மசக்கரம்.

காலம் பெறுமதியானது. மில்க்வைற் சலவைப்பவுடர் நைலோன், டெர்லின் டெக்ரோன் ஆகிய துணிகளை சில நிமிடங்களில் பிரகாசமாக சலவை செய்கிறது. பாவித்த மேலுறைகளை சேகரித்து அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
**த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.**

# இறைவா கொஞ்சம் கருணை காட்டு!

அன்பு நண்பா,

• • ஆயிரம் வேல்களை இதயத்திலே ஒரே நேரத்தில் துளைத்திட்டது போன்றதோர் வேதனையை அடைந்தேன்; எப்படி முயன்றிடினும் என்னையும் மீறி கண்களிலிருந்து பீறிட்டுக்கிளம்பியது கண்ணீர்; இரும்பு உள்ளத்தான்; இடியேறுபோன்ற குரலெடுத்து தமிழ் எதிரிகளின் இடுப்பொடித்திடும் விறல்வேங்கை; கன்னித் தமிழ் காத்திட களம்பலவற்றை கடந்த கால் நூற்றாண்டு அரசியல் வாழ்வில் கண்டுவிட்ட காவலன்; பேச்சும் மூச்சும் தமிழ், தமிழர் நலமெனவே வாழ்ந்திட்ட செம்மல்; ஈழத்தமிழினத்தின் உயிர்த்துடிப்பு—எங்கள் தங்கம் டாக்டர் நாகநாதன் அவர்களை இத்திங்கள் பத்தாம் நாள் கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் நான் பார்த்தபோது!

வீர வரலாறுகள் பலவற்றை படைத்திட்ட வேழம் அங்கே ஒய்ந்துகிடந்தது; 'உயிர் எனக்கு வெல்லமல்ல; ஆனால் அந்த உயிரை அனுவசியமாகப்பறித்துவிடாதே; எனது உயிரை தமிழன்னைக்குத் தத்தம் செய்திருக்கிறேன்; எனவே தமிழன்னையை காத்திடும் போரில் நான் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் வந்து என் உயிரை வேண்டுமானால் கொண்டு போய்விடு காலதேவனே; இப்போது விட்டுவிடு; அடிமைப்பட்டு விடுதலை தவறிக்கெட்டு, சீரழிந்துகிடந்திடும் ஈழத்தமிழினத்துக்காக மேலும் சில காலம் பணியாற்றிட இன்னும் கொஞ்சம் என்னை வாழவிடு; இது எனக்காக அல்ல; என் இனத்துக்காக நான் விடுத்திடும் கோரிக்கை''—இப்படியெல்லாம் அந்த வீரத்திருமகன் இயற்கை அன்னையுடன் நாம் கேட்டிடக்கூடியதாக பேசிக்கொள்ளாவிடினும் இதயத்தால் பேசிக்கொண்டிருப்பது என் உள்ளத்துக்கு புரிந்தபோது அது வெடித்து விடாமலிருந்தது ஆச்சரியம் நண்பா!

ஈழத்தமிழ் நாட்டின் மூலை முடுக்கெங்கும், சந்துபொந்தெங்கும் சுற்றித்திரிந்து தமிழ் தேசிய உணர்வை — விடுதலை வேட்கையை உரிமை உணர்ச்சியை—வீராவேசத்தை—உண்டாக்கிவிட்ட அந்தப்பாதங்கள் சோர்ந்து போய்துவண்டுகிடந்தன; தமிழுக்காக, தமிழினத்துக்காக, தமிழர் நாட்டுக்காக உலாவித்திரிந்த அந்தப்பாதங்களில் என் இதயமலரை எடுத்து அர்ப்பணித்தேன்!

தமிழர் வீரத்தை எடுத்துக்காட்டிடும் தேஜஸ் நிறைந்த அந்த முகம்—ஒளியுமிழும் அந்தக்கண்கள்—பரந்த அறிவை எடுத்துரைத்திடும் அந்த விரிந்த நெற்றி; தமிழுரிமைப் போராட்டத்தின்போது பொலீசாரின் குண்டாந்தடியையே பதம்பார்த்த அந்த மொட்டந்தலை; எல்லாமே வாடிவதங்கிச் சோர்ந்து போய்க்கிடந்தன!

எத்தனையோ அரசியல் மேடைகளில் ஏறி நின்று எதிரிகளின் கொட்டம் அடக்கிய அந்த வாய்—நாடாளுமன்றத்திலே தமிழ் எதிரிகளின் திமிரை அடக்கி, தமிழர் மானம் காத்திடும் வீரஉரைகள் பலவற்றை வழங்கிய அந்த வாய்—பேச முடியாமல் திக்கித் திணறுவதைக் கண்டபோது, 'அம்மா தமிழ்த்தாயே—பாரம்மா, உனக்காகவே தன்னை அர்ப்பணித்த ஒரு தொண்டன்படும் வேதனையை' என்று உள்ளத்தால் கதறி அழுதேன்.

ஈழத்தமிழகத்தின் விடுதலைக்காக நமது இயக்கம் நடத்திய அத்தனை போராட்டங்களிலும் தலைமைத்தளபதியாக — முன்னோடும் வீரனாக — வழிகாட்டியாக நின்று தியாகத் தழும்புகள் பலவற்றை சுமந்துகொண்ட அவரது வீரமார்பு மெலிந்து இளைத்துக்கிடந்திடக்கண்டேன். இரும்பு மனிதர், இரும்பு மனிதர் என்று நாமெல்லாம் ஆசையுடன் அழைத்துவந்த அந்த வீரத்தலைவரின் திருமேனி துரும்பு ஆகி இருந்திடக்கண்டேன்!

நண்பா, அரசினர் வைத்தியசாலையில் நோயாளியாக — நூல்போல் இளைத்து— நொடிந்துபோய்க்கிடக்கும் டாக்டரைக் கண்டபோது, இறைவனையே என் மனதுக்குள் திட்டிக்கொண்டேன். விதியே விதியே! தமிழச் சாதியை என்செயக்கருதியிருக்கிறாயடா என்று விதியின் மீதே சீறிச்சினந்தேன்.

டாக்டர் நாகநாதன் யாருக்கும் எந்தத் தீங்கும் நினைக்காதவராயிற்றே; சுயநலம் என்பது இஞ்சிற்றும் அற்றவராயிற்றே; தமிழன் என்று கூறிக்கொண்டு தன்னிடம் வரும் எவருக்கும்—அவர் எந்தக்கட்சியைச் சேர்ந்தவராக இருந்திடினும் — ஓடிச்சென்று உதவுபவராயிற்றே; எதிரியையும் நேசித்திடும் உயர்ந்த பண்பு கொண்டவராயிற்றே; இந்த நல்லவரை—வல்லவரை ஏன்தான் துன்புறுத்துகிறாய் இறைவா; நல்லவர்களை நலத்துடன் வாழ விடாவிட்டால், நீ இறைவனாக இருந்திடவே தகுதியற்றவன்; என்று ஏதோவெல்லாம் என் மனதுக்குள் கூறிக்கொண்டேன்.

டாக்டரையே வைத்தகண் வாங்காமல் நான் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தபோது நம்முடைய தமிழரசுத் தந்தை அவர்கள் மெல்ல மெல்ல அடியெடுத்து வந்து டாக்டரின் அருகில் நிற்கிறார். தந்தையின் வதனத்தில் என்றுமேகண்டிராத சோகம் கப்பியிருந்தது; அமைதியாக ஐந்து நிமிடங்கள் டாக்டரையே வைத்த கண் வாங்காது பார்த்தபடி நிற்கின்றார்; தந்தையின் கைகளை டாக்டர்பற்றிக் கொள்கிறார்; படுக்கையைவிட்டு எழுந்திட முயலுகிறார் முடியவில்லை; ஏதோ சொல்ல வாயெடுக்கிறார்; அதுவும் முடியவில்லை; நாகநாதன் அவர்களின் கண்களிலிருந்து தாரைதாரையாகக் கண்ணீர் வருகிறது; ஒரு கையைத்தூக்கி போய்வருகிறேன் என்பதுபோல பெரியவருக்கு 'டாட்டா' காட்டுகிறார்; இக்காட்சிதனைக் கண்டபோது என் இதயம் அப்படியே சில்லிட்டது போன்ற உணர்ச்சியில் மலைத்து நின்றேன்.

நண்பா, தமிழினம் இந்நாட்டில் விடுதலைக் காற்றை சுவாசித்திட வேண்டுமென்பதற்காக ஓயாது ஒழியாது போராடிவந்தவருக்கு சுவாசிப்பதற்கு பிராணவாயு செலுத்தியிருக்கிறார்கள். ஆம், டாக்டர் போன்றவர்கள் சுவாசித்தால்தான், இந்நாட்டில் தமிழ் உணர்ச்சியும், விடுதலை ஆவேசமும் சுவாசித்திட முடியும்! தமிழர்கள் தன்மான உணர்வை சுவாசித்திட முடியும்! தமிழ்த்தாய் நம்பிக்கையுடன் வாழ முடியும்!

காலதேவனே, தமிழினத்தின் மத்தியில் இருக்கும் களைப்புற்களின் மீதும், கோழைகளின்மீதும் சோத்திகளின்மீதும் உன் கண் பார்வை ஏன் செல்லவில்லை? ஏனையா, வளர்ந்து பயன்தரும் நெற்பயிர்களையும், வைரமரங்களையும் எம்மிடமிருந்து வஞ்சித்துக் கொண்டு செல்லப்பார்க்கிறாய்? தமிழினத்தைக் காட்டிக்கொடுத்திடும் பதவிப் பித்தர்கள், பச்சைத் துரோகிகள், மாபாவிகள்மீது, உன் பார்வையை திருப்பிடாமல், தமிழன்னையின் ஏற்றத்துக்காக தங்களையே அழித்துக்கொண்டுவரும் தியாகிகள் மீது—வல்லவர்கள் மீது--நல்லவர்கள் மீது ஏன்தான் உன் கொடூரக் கரங்களை நீட்டிவருகிறாய்? தமிழினத்தை அழித்தொழித்து விடுவதென்பதே உன் இறுதி முடிவா — என்றுதான் ஆத்திரம் பொங்கிடக் கேட்டிடத் தோன்றுகிறது.

இறைவா எங்களிடமிருந்து வன்னியசிங்கத்தைப் பறித்துக்கொண்டாய்; இராசவரோதயத்தை விதியின் கொடூரப்பசிக்கு இரையாக்கினாய்; ஏகாம்பரத்தை எடுத்துக்கொண்டாய்; வீ. ஏ. கந்தையாவை விழுங்கிவிட்டாய்; அடுத்து எங்கள் நாகநாதன் மீதா உன் கழுகுப் பார்வை பாயவேண்டும்? வேண்டாம், இறைவா, வேண்டாம், எங்கள் இயக்கத்தலைவர்களை கொஞ்சக் காலத்துக்கு என்றாலும் வாழவிடு; இன்றேல் நீ படைத்த தமிழ் என்று கூறுவார்களே, அந்தத் தமிழுக்கு இந்நாட்டில் சமாதி கட்டிவிடும் வல்லூறுக்கூட்டம்! தமிழை வாழவைக்க — தமிழினத்துக்கு வாழ்வுகண்டிட — தமிழுக்காக உழைப்போரை எங்களிடம் விட்டு விடு; என்று இறைவனை நோக்கிக் கதறியழுவதைத் தவிர நாமென்ன செய்திடமுடியும்?

நண்பா, நோயால் வாடி மெலிந்து படுக்கையில் இன்று வீழ்ந்து கிடக்கும் டாக்டரின் வீரத்திருமேனி, தமிழினத்துக்காக நடத்திய வீர சாகசப் போராட்டங்கள் தாம் எத்தனை எத்தனை?

1956-ம் ஆண்டு ஆனி ஐந்தாம் திகதி சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து காலிமுகத் திடலில் நடைபெற்ற அறப்போரின்போது காடையர்கள், உடைகளைக்கிழித்து வீசி விட்ட நேரத்திலும் கௌபீனத்துடன் காடையர்களை எதிர்த்து நின்று, தாக்கப்பட்ட தொண்டர்களுக்கு முதலுதவி செய்த மெய்சிலிர்க்கும் காட்சிதனை மறந்திடமுடியுமா?

1958-ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது கொழும்பிலே சிங்களக் காடையருடன் தன்னந்தனியனாகப் போரிட்டு அவர்களை விரட்டியடித்த பெருமையினை டாக்டரின் நெற்றியின் மேற்பரப்பில் ஆழப்பதிந்திருக்கும் தழும்பு இன்றும் கூறாமல் கூறிக்கொண்டிருக்கிறதே!

1961-ம் ஆண்டு பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஈழத்தமிழகத்தில் தமிழரசுக்கட்சி நடாத்திய வீரப்போராட்டம் வரலாற்றில் இடம்பெற்றுவிட்ட நிகழ்ச்சிகளிலே குறிப்பிடத்தக்கதொன்று, ஈழத்தமிழ்நாட்டில் சிங்கள ஆட்சியின் நிர்வாகத்தை ஸ்தம்பிக்க வைத்த பெரும் போராட்டம் இது. இப்போராட்டத்தின் கதாநாயகனாக விளங்கியவர் நமது டாக்டரன்றோ!

இங்கிலாந்தில் படிக்கும் காலத்தில்-வாலிப வயதில்—சுதந்திர உணர்ச்சியால் உந்தப்பட்டு மொரக்கோ நாட்டு முஸ்லிம் மாணவர்களுடன் சேர்ந்து அந்த நாட்டு விடுதலைக்காக பிரெஞ்சு ஸ்பானிஷ் துருப்புகளை எதிர்த்துப் போராடி ... வீரக்கதை அவரது முழங்காலில் பாய்ந்திருக்கும் துப்பாக்கிரவை இன்றும் எடுத்து ... வரலாறு அன்றோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் மேடை

அதுமட்டுமல்ல—1961-ம் ஆண்டு அவசர காலச் சட்டத்தை ஏவி நமது போராட்டத்தை நசுக்கிவிட்டு—தலைவர்களையெல்லாம் அன்றைய ஆட்சியாளர் சிறையிலிட்டநேரத்தில், பாராளுமன்றத்தின் மூலம் நமது போராட்டம் நசுக்கப்பட்டதனை உலகுக்கு எடுத்துரைத்திடும் ஆவலினால் உந்தப்பட்டு பொலீசுக்குடிமிக்கி கொடுத்துவிட்டு பாதிரிவேடத்தில் பயணமான சேதியைத்தான் மறந்து விட முடியுமா?

சென்ற ஆண்டு காருண்யம் மிக்க ஆளவந்தார்கள் கொள்ளுப்பிட்டி பொலீஸ் 'லாக்கப்பில்' என்னைக் கைதுசெய்து பூட்டி வைத்திருந்த நேரத்தில்—தன் உடல் நலிவையும் பொருட்படுத்தாது பொலீஸ் ஸ்டேசனுக்கு ஓடோடி வந்து என்னை விடுவிப்பதற்காக பொலீஸ் மேலதிகாரிகளுடன் ஒரு போராட்டமே நடத்தினாரே—அந்தப் பெரிய உள்ளத்தைத்தான் மறந்திடமுடியுமா?

டாக்டர் அவர்களின் போராடும் திறமையைப்பற்றிக் கூறும்போது 'இரும்பு மனிதர் நாகநாதன்' என்னும் தமது நூலிலே பின்வருமாறு கூறுகிறார் நண்பர் கரிகாலன்;

''படையமைப்பு உத்தியிலே அவன் ஓர் பிஸ்மார்க்; வீரர்களை ஆணையிடும் அழகுக்கு அவன் ஓர் நெப்போலியன்; தானே வீரனாகிப் போர் புரியும் பணியிலே அவன் ஓர் மாவீரன் அலக்சாந்தர். இத்தனை இலட்சணங்களினதும் மொத்த உருவத்திற்கு பெயர் நாகநாதன்''

என்று குறிப்பிடுவதை யார்தான் மறுத்திட முடியும்?

நண்பா, ஒரு திங்களுக்கு முன் டாக்டரை அவரது இல்லத்தில் சந்தித்து பேசினேன். இன்றைய தமிழினத்தின் அடிமைத்தனமான போக்குக்கண்டு அவரது உள்ளம் மிகவேதனையடைந்திருந்தது. அற்ப சலுகைகளுக்காக தமிழினம் ஆளுங்கட்சியிடம் மண்டியிடுவதை அவர் வெறுத்தார். தமிழ் மக்களின் அரசியலில் கள்ளர்களும் துரோகிகளும், எட்டப்பர்களும் மலிந்துவிட்டார்கள் என்று சொல்லித்துக்கித்தார். தமிழன் யாருக்கும் அஞ்சியோ, யாரையும் கெஞ்சியோ வாழக்கூடாது; நாம் ஆண்ட இனத்தவர்; நாம் யாருக்கும் தலைசாய்த்திடக் கூடாது; மற்றவர்களின் காலில் தமிழன் விழக் கூடாது! மற்றவர்கள் தம் காலில் விழக்கூடிய

# எங்கள் டாக்டரை வாழ விடு!

தாக தமிழர்கள் நடக்கவேண்டும்; என்றெல்லாம் கூறினார். எத்தனை பெருந்தன்மை மிக்க தமிழர் இவர் என்று எண்ணி வியப்படைந்தேன்.

கடைசியில் அவர் என்னிடம் கூறினார்—தமிழர் இனி அஹிம்சையை மட்டும் நம்பி இருப்பதில் பயனில்லை. தற்பாதுகாப்புக்கு வேறு வழிகளைப்பற்றியும் சிந்தித்திடவேண்டும் என்று! ஆம், நண்பா உடல்மெலிந்து, வீட்டில் ஒய்ந்திருந்த போதும், தமிழர் விடுதலைபற்றியே சிந்தனை; தமிழின் எதிர்கால வாழ்வு பற்றியே பேச்சு; தமிழன் உரிமைப்போராட்டம் பற்றியே திட்டம்;

ஆம், தமது ஒவ்வொரு மூச்சையும் தமிழினத்தின் சுபீட்சத்துக்காகவே விட்டு வரும் தியாகச் செல்வர் நமது டாக்டர் அவர்கள்!

அந்தப்பெருமலை—தங்கத்தமிழ்மலை—ஈழத்தமிழக விடுதலைப்போரின் முதல் வரிசைத் தளநாயகர்—நல்லவர்—வல்லவர்; எதற்கும் நிலைகலங்காத வீரமறவர்; மானத் தமிழர்; எங்கள் டாக்டர் நாகநாதன்;

இறைவா, அந்த டாக்டரை—எங்கள் உயிரை— எங்களிடமிருந்து பறித்து விடாதே. அவரை வாழவைவு டாக்டரின் உயிருக்கு பதிலாக வேறு உயிர் உனக்கு வேண்டுமானால் அதைத்தருவதற்கு தயாராக இலட்சோப இலட்சம் தமிழ் மக்கள் காத்திருக்கிறார்கள். காலதேவனே தமிழினத்தின் மீது கொஞ்சம் கருணை காட்ட மாட்டாயா?—என்று கண்ணீர் விட்டுக்கதறிக் கேட்டிடுவோம்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

# 'அநீதி இழைக்கும் பெரும்பான்மை இனத்துடன் ஒத்துழைக்க மறுப்பதே எமக்குள்ள ஒரே வழி!



இலங்கைத் தமிழரசுக் கட்சி, அரசாங்கத்தோடு 1960ம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரையும் பேச்சுவார்த்தை நடத்தியது. 1960ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை ஆதரிக்க மறுத்து, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை விழச் செய்தது. அதன் பின்னர் நாங்கள் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உதவி செய்தோம். அதன் பயனாக அதே ஆண்டு ஜூலை மாதம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அதிகாரத்துக்கு வந்தது. இவ்வாறு உதவி செய்வதற்கு முன் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க அவர்களின் வீட்டிலே பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன.

அப்பொழுது பண்டாரநாயக்க-செல்வநாயகம் உடன்படிக்கையைப் பெரும்

## தமிழரசுக் கட்சி ஏற்றுக்கொண்ட கொள்கையிலிருந்து இம்மியும் விலகாது!

பாலும் நடைமுறைப்படுத்துவதாகவும் 1960ம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலே முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவுகளையெல்லாம் மிக அழகாக என்னுடைய தொகுதியின் முன்னை நாள் உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற கௌரவ வீ. ஏ. கந்தையா அவர்கள் 1962ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 30ம் திகதி பாராளுமன்றத்திலே பேசும்பொழுது எடுத்துக்கூறியுள்ளார்கள். அவருடைய பேச்சு 1962/63ம் ஆண்டு ஹன்சார்ட்டிலே 743ம் நிரல் தொடக்கம் 780ம் நிரல் வரை அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் பயனாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைத் தோற்கடித்து சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை மீண்டும் ஆட்சிக்கு வரச் செய்ததற்காக 1960ம் ஆண்டிலே தமிழ்மொழிப் பிரமாணங்களை அவர்கள் சமர்ப்பித்தார்கள். அந்தப் பிரமாணங்களினாலே எந்த விதமான பயனும் இல்லையென்று தமிழரசுக் கட்சி அந்தப் பிரமாணங்களை எதிர்த்தது. அந்தப் பிரமாணங்களைச் சமர்ப்பித்த அரசாங்கம் பின்னர் கட்சியிலேற்பட்ட சில பிளவுகள் காரணமாக, சில சூழ்ச்சிகள் காரணமாக, அந்தப் பிரமாணங்களை மீட்டுக்கொண்டது. அந்தப் பிரமாணங்கள் என்ன என்பதை நான் இங்கு சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அந்தப் பிரமாணங்கள் அவ்வளவு நல்லமுறையிலே தமிழ் மக்களுக்கு உரிமைகளைக் கொடுக்காவிட்டாலும் தமிழ் மொழியிலே கடிதம் எழுதினால் தமிழிலேயே மறுமொழி கொடுக்கவேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துக்கூறின. அந்தப் பிரமாணங்கள் முழுவதும் எங்களுக்குத் திருப்தி தராவிட்டாலும்கூட, சில உரிமைகளைத் தர முயன்றன. ஆயினும் அந்தப் பிரமாணங்களை அவர்கள் மீட்டுவிட்டார்கள். அதனாலே தமிழ்மொழிக்கு உரிய உரிமைகளை அப்பொழுது பெறமுடியவில்லை.

பின் என்ன நடந்தது? 1960ம் ஆண்டிலே சத்தியாக்கிரகம் நடந்தது. 1961ம் ஆண்டிலே தமிழ் அரசுக்கட்சியினர்-தமிழ் மக்கள்-பெரும் சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்தினார்கள். அந்தச் சத்தியாக்கிரகத்தின்போது தமிழ் மக்களின் குறையைத் தீர்க்க அப்பொழுதிருந்த அரசாங்கம் தமிழ் அரசுக் கட்சியோடு பேச்சுவார்த்தை நடத்தியது. நடத்திய அந்தப் பேச்சு வார்த்தை முறிந்தது.

அந்தப் பேச்சுவார்த்தை பற்றிப் பாராளுமன்றத்திலே, அப்பொழுது சபை முதல்வராக இருந்த சீ.பீ.டி. சில்வா குறிப்பிட்டார். அதைப் பற்றிய அறிக்கை 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ந் திகதி 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் விரிவாக வெளியாகியுள்ளது.

"Government rejects five demands of F.P. 'Conficts with Sinhala Only Act' " என்ற தலைப்புடன் அந்த அறிக்கை வெளியாகியிருக்கிறது.

"சிங்களம் மட்டும் சட்டத்துக்கு மாறுபாடாக இருப்பதால் தமிழரசுக் கட்சியினுடைய வேண்டுகோளை ஏற்க முடியாது என்று அரசாங்கம் அதை நிராகரித்தது" என்று அந்தச் செய்தி கூறுகிறது. அப்பொழுது ஐந்து வேண்டுகோள்களைத் தமிழரசுக் கட்சியினர் விடுத்தனர். அப்பொழுது அரசாங்கத்தின் சார்பில் நீதி அமைச்சர் சாம் பீ. சீ. பெர்ணாண்டோ திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களோடும் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களோடும் பேச்சுவார்த்தை நடாத்தினார். அந்தப் பேச்சுவார்த்தையின்போது,

"The Tamil language to be the language of the Northern and Eastern provinces for all administrative purposes;

The Tamil language to be the Language of the Courts in those areas;

The setting up of Regional Councils;

The position of the Tamil public servants in relation to the implementation of the Official Language Act;

The rights of Tamil-speaking persons outside the Northern and Eastern provinces."

—என்ற ஐந்தையும் பற்றிப் பேசப்பட்டது.

இந்த ஐந்தும் சிங்களம் மாத்திரம் சட்டத்துக்கு மாறாக இருப்பதால் அவற்றை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று அரசாங்கம் மறுத்தது.

அதன் பின்னர் 1961ம் ஆண்டு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க இரண்டு குழுக்களை நியமித்தார் என்றும் அந்தக் குழுக்களின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டும் அவை ஆராயப்படவும் இல்லை; நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை.

அதன் பின்னர் 1965ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சியோடு தமிழரசுக் கட்சி சேர்ந்தது. தமிழ் மொழி உரிமைகளைப் பெறுவதற்காக, தமிழ்மொழிச் சட்டத்தின்கீழ் பிரமாணங்களைக் கொண்டு வந்து நிறைவேற்ற ஐக்கிய தேசியக் கட்சி உடன்பட்டபடியால், அவர்களோடு தமிழரசுக் கட்சி சேர்ந்து அவர்களை ஆட்சி பீடத்தில் அமர்த்தியது.

இந்த உடன்படிக்கையின்படி ஐக்கிய தேசியக்கட்சி 1966ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் தேதி தமிழ் மொழிப் பிரமாணங்களை பாராளுமன்றத்திலே கொண்டுவந்தது. அப்பொழுது அந்தத் தமிழ்மொழிப் பிரமாணங்களை எதிர்க்கட்சியாக இருந்தவர்கள்—இப்பொழுது கூட்டணிக்கட்சியாக இருப்பவர்கள் — மும்முரமாக எதிர்த்தார்கள். அவர்கள் எதிர்த்ததும் அல்லாமல் 1961ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம்தேதி 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் ஒரு எதிர்ப்பு அறிக்கையும் விடுத்தார்கள்.

அந்த அறிக்கையிலே அவர்கள் குறிப்பிட்டதை நான் இப்பொழுது இங்கே குறிப்பிட விரும்புகிறேன்; ஏனென்றால் அப்படியான கருத்துள்ள தலைவர்கள் இந்த இரண்டு சட்டங்களையும் அடிப்படையாகக்கொண்டு அவற்றுக்குள்ளே தமிழ்மொழிப் பிரச்சினையைத் தீர்க்க முயலமாட்டார்கள் என்பதை மீண்டும் வற்புறுத்துவதற்காகவே நான் அதனைக் குறிப்பிடுகிறேன்.

"Regulations framed by the Government of the U. N.P. and the Tamil Arasu Kadchi proceed on an entirely different footing. they are an important first step in implementing the secret agreement between the U. N. P. and the Tamil Arasu Kadchi which lays the basis for the division of Ceylon. these Regulations make it clear that the leaders of the U. N. P. have accepted the fundamental aims of the Tamil Arasu Kadchi which seeks to divide Ceylon into two separate and distinct State units."

என்று அவர்கள் அறிக்கை விட்டிருந்தார்கள்.

## அஹிம்சை வழியில் தொடர்ந்து போராடி இன விடுதலையை அடைந்தே தீருவோம்!

### அரசியல் நிர்ணய சபையில் பண்டிதர் சங்கநாதம்!

அந்த அறிக்கை ஒரு நீண்ட அறிக்கையாக இருக்கிறது. சுருக்கமாகக் கூறுவதானால், தமிழரசுக் கட்சியினர் கேட்டுக்கொண்டதற் இணங்க' தமிழ் மக்களுக்குச் சில உரிமைகளை மாத்திரமே தருகிற தமிழ்மொழிப் பிரமாணங்களைத் தேசிய அரசாங்கம் கொண்டுவந்த பொழுது அதை ஐக்கிய முன்னணியினர் எதிர்த்தார்கள். அதே நிலைதான் 1960ம் ஆண்டு நாங்கள் சிறீலங்கா கட்சியோடு பேச்சுவார்த்தை நடாத்தி, அவர்களோடு சேர்ந்து உடன்படிக்கை செய்தபொழுது இருந்தது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தேசிய அரசாங்கம் தமிழ் மொழிக்குச் சில உரிமைகளைக் கொடுக்க முன்வந்த பொழுது "இரகசிய உடன்படிக்கை இருக்கிறது; தமிழர்களுக்குச் சிங்களவர்களை விற்கிறார்கள்; சிங்களம் மாத்திரம் சட்டத்தைப் பலமற்றதாக்க, அதை மீறத்தக்க முறையிலே தமிழ்ப் பிரமாணங்களைக்கொண்டு வந்திருக்கிறார்கள்" என்று இப்பொ[illegible] சிறீலங்கா சுதந்திரக் கட்சி [illegible] 1960ம் ஆண்டு எவ்விதம் குரல் எழுப்பியதோ, அதனைப்போல 1962ம் ஆண்டிலே யூ.என்.பி. கட்சி குரல் எழுப்பியது.

எனவேதான் கடந்த பதினைந்து ஆண்டுக்காலத்தில் தமிழ்மொழி உரிமைப் போராட்டம் இந்த இரண்டு கட்சிகளினதும் அரசியற் கைப்பந்தாட்டமாக இருந்திருக்கின்றதென்பதையும் இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்த அவை இந்நாட்டில் ஆட்சிக்குவர முயன்றிருக்கின்றன என்பதையும் காட்டுகின்றது. இந்த நிலை மாற வேண்டும்.

இன்று இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து பன்னிரண்டு மாதங்களாகியும், "தமிழ் மொழியில் வரும் கடிதங்களுக்கு எப்படி மறுமொழி அனுப்பவேண்டும், தமிழ் மக்களுக்கு அனுப்பும் சுற்றறிக்கைகளை எப்படி அனுப்பவேண்டும்? வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கச்சேரி போன்ற பொது இடங்களில் எப்படித் தமிழ் இடம் பெறவேண்டும்" என்பன போன்ற பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை.

ஒவ்வொரு நாளும் இது பற்றி தமிழ்மக்கள் எங்களைக் கேட்கின்றார்கள். "எங்களுக்குத் தனிச் சிங்களத்தில் கடிதங்கள் வருகின்றனவே, எங்களுக்குச் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டும் கடிதங்கள் வருகின்றனவே" என்று அவர்கள் கேட்கின்றார்கள். அதனால் மனம்உடைந்த நாம் உணர்ச்சியோடு பேசுகின்றோம்.

சிங்கள நண்பர்கள் தங்கள் தாய்மொழியை எவ்விதம் நேசிக்கின்றார்களோ அதே போன்று நாமும் எங்கள் தாய்மொழியை நேசிக்க வேண்டும் என்பதைத் தாய்மொழியை நேசிக்கின்ற ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்வார்கள். அதைவிட்டு, தாயைப் பட்டினி போட்டு ஒரு மூலையில் வைத்துவிட்டு, வேறொரு தாயைக் கொண்டு வந்து தம்முடைய வீட்டில் வைத்து, அந்தத் தாயைப் போற்றுகின்றவர்கள் மட்டும்தான் இதற்கு மாறான கருத்துக்களைக் கொண்டிருப்பார்கள். அவர்கள் தாயைக் காட்டிக் கொடுக்கும் பழிகாரர்கள்.

தாய்மொழியில் கருமமாற்றும் பொழுது ஒவ்வொரு நாளும் எவ்வளவோ துன்பங்கள் எங்களுக்கு ஏற்படுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில், தமிழ் மக்கள் இதுபற்றி எங்களைக் கேட்கின்றார்கள்.

தமிழில் மறுமொழி பெறுவதற்கும் தமிழில் மொழி பெயர்ப்பைப் பெறுவதற்கும் அதிக வித்தியாசம் உண்டு. ஓர் இரண்டாம் தரப் பிரசைக்குத்தான் மொழிபெயர்ப்பு. தமிழில் மறுமொழி பெறுவதும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமையாகும்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்குச் சென்ற பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் அங்கு என்ன சொன்னார்? எவரும் அரசாங்கத்திற்குத் தமிழில் கடிதங்கள் எழுதினால் அவர்களுக்குத் தமிழில் மறுமொழி அனுப்பப்படுமென்றும் அப்படி வராவிட்டால் அத்தகைய விடயங்களைத் தமது கவனத்திற்குக் கொண்டுவரும்படியும் கூறினார்.

தமிழில் கடிதங்களை எழுதும் எனக்குத் தமிழில் மறுமொழியோ, அல்லது தமிழ் மொழி பெயர்ப்புத்தானுமோ வருவதில்லை. தமிழ் உணர்ச்சி இல்லாதவர்களாக, அடிமை மனப்பான்மை உள்ளவர்களாகச் சிலர் இருக்கலாம். நாங்கள் இங்கு உண்மையோடும் உணர்ச்சியோடும் தான் பேசுகின்றோம். அதனால்தான் நாங்கள் இந்த அடிப்படைத் தீர்மானங்களை எதிர்க்கவேண்டி இருக்கின்றது.


இந்த அடிப்படைத் தீர்மானங்களுக்கு நாங்கள் சில இருத்தங்களைக் கொண்டு வந்து இருக்கிறோம். இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்குப் பணி செய்யவும் கடமைப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களைக் கஷ்டப்படுத்த வேண்டாம் என்றுதான் நான் அரசாங்கத்தைக் கேட்கிறேன்.

இன்றைய சூழ்நிலையிலே, இந்த நாட்டிலே சிங்கள, தமிழ் மொழிப் பிரச்சினை ஒரு பிரச்சினையாக இருப்பதை யாரும் மறுக்க முடியாது. இதனை மிக விரைவில் தீர்க்கத்தக்க முறையிலே இரண்டு சட்டங்களையும் அடிப்படையாக வைத்து நடவடிக்கை எடுக்க முடியாது. அதை நன்கு ஆராய்ந்தவர்கள், அதிலே ஈடுபட்டவர்கள் இதனை ஏற்றுக்கொள்வார்கள். இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதனாலே 1956ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இந்த நாட்டிலே பல கலவரங்கள் ஏற்பட்டன. எதிர்பாராத சம்பவங்கள் ஏற்பட்டன. சதிகள் ஏற்பட்டன. ஒரு பிரதம அமைச்சர் கொலை செய்யப்பட்டார். ஒரு புத்தபிக்கு சுடப்பட்டார். ஒரு புத்தபிக்குவுக்கு ஆயுள் தண்டனையாகச் சிறைவாசம் விதிக்கப்பட்டது.

1966ம் ஆண்டு ஒரு புத்த பிக்கு சுட்டுக்கொல்லப்பட்டார். மொழி காரணமாக என்று நீங்களே சொன்னீர்கள். அவருக்கு நினைவுச் சின்னமும் எழுப்பியிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட கலவரங்களுக்கு இடமளிக்காமல் இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய அரிய தருணம் வந்துவிட்டது. நீங்கள் இந்தப் பிரச்சினையை விடுவிக்க வேண்டும். அப்படி விடுவிக்காவிட்டால் இந்த அரசியலமைப்புச் சபையிலே நாங்கள் இருப்பதால் பயனில்லை.

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




அன்பின் கோவைமகேசன் அவர்கட்கு,

யான் இயற்கையாக கண் பார்வையற்றவனாக இருந்தும், எழுதவோ வாசிக்கவோ முடியாதவனாக இருந்தும் வாராவாரம் வெளிவரும் தமிழர்களின் உணர்ச்சி ஏடாம் சுதந்திரனை எனது சொந்தப்பணம் செலுத்தி வாங்கி எனது உறவினர்களிடம் கொடுத்து அவர்கள் மூலம் செய்திகளை அறிந்து வருகிறேன்.

30-7-71 இதழில் வெளிவந்த "மாட்டினுக்கு மனச்சாட்சி இருந்தால்..." [3] என்னும் தலையங்கத்தைத் தாங்கி வந்த அரசியல் மடலை பார்த்த எந்தத் தமிழனுக்கும் தமிழ் உணர்ச்சி பொங்காமல் இருக்கமுடியாது. அவற்றில் என்மனத்தில் என்றும் நீங்காமல் இருக்கும் சில பகுதிகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் மக்களின் தலைமை தமிழரசுக்கட்சியில் மட்டும் தங்கியிருக்கிறதா அப்பாலும் ஆறு பிரதிநிதிகள் இருக்கிறார்கள்தானே என்று குதர்க்கவாதம் செய்தமாட்டின் பின் அரசியல் நிர்ணய சபையில் நீதி மன்றத்தில் குறிப்பாக வடக்கு கிழக்கு நீதிமன்றங்களில் தமிழுக்கு உச்ச முதன்மை கொடுக்கப் போவதாகவும் தமிழரசார் வெளியேறியதால் நடைபெறவில்லையெனவும் பேசியிருக்கிறார். இதிலிருந்து தமிழர்களின் தலைமை தமிழரசுக்கட்சியில் இருக்கிறது என்று அவரும் அரசும் ஒத்துக்கொள்ளுகிறார்கள் என்பதை அவரது உரையிலேயே சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள்.

எழுபதாம் ஆண்டு சபையில் தமிழரசுக்கட்சிக்கு தமிழ் மக்களிடையே செல்வாக்கில்லை என்று முக்காலிகளும் மற்றும் அடிவருடிகளும் கூறியதற்கு அன்றைய மார்ட்டின் சுடச்சுட பதிலிறுத்ததையும் அதே பதிலை பொறுப்பில்லாமல் பேசும் இன்றைய மாட்டினுக்கு தாங்கள் கொடுத்திட்டது மிகவும் வரவேற்கத்தக்கது மட்டுமல்லாமல் இதை விடவேறு கொடுக்கவும் முடியாது.

மனச்சாட்சி என்ற போர்வைக்குள் மறையப்பார்க்கும் மாட்டினுக்கு நான்கே நான்கு கேள்விகள் மூலம் அவரது போர்வையை கிழித்தெறிந்தது மட்டுமல்லாமல் இனி மனச்சாட்சி பற்றி பேசக்கூட மாட்டினுக்கு இடம் வைக்க முடியாமற் செய்து விட்டீர்கள்.

இவையனைத்தையும் அறிந்த மாட்டின் அவர்கள் தாம் நேர்மையானவர் என்பதை நிரூபிப்பதற்கு நிச்சயமாக யாழ் பா. உ. பதவியை துறந்துதான் ஆகவேண்டும். ஆனால் அவர் அவ்விதம் செய்ய மாட்டார். அவருக்கு அப்படிச்செய்ய எங்கே உண்டு திராணி?

அண்ணா விழியிற் சென்று உறங்கும் தமிழர்களைத் தட்டி யெழுப்பும் தங்கள் பணி என்றென்றும் தமிழர் சரித்திரத்தில் நிலைத்து நிற்கு மென்பதற்கு கிஞ்சிற்றும் ஐயமில்லை

—இப்படிக்கு
சுதந்திரப் பிரியன்
—செ. தம்பிராசா
நாவற்குழி,
கைதடி.

அன்புள்ள ஆசிரியருக்கு:—

மனச்சாட்சி என்ற போர்வையில் தமிழினத்துக்கு மாறாத துரோகம் செய்துவிட்ட மாட்டின் எட்டப்பர்களின் பட்டியலில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டார். தமிழினம் முழுவதும் ஒரே அணியில் நின்று போராட வேண்டிய நேரத்தில், அறிஞன், நீதியின் நாயகன் என்று தமிழ் மக்களால் மதிக்கப்பட்ட ஒருவர் பதவி மோகத்தால் இன்று காறியுமிழப்படுகிறார். தமிழினத்தை அழித்தொழிக்க கங்கணம் கட்டிக்கொண்டிருப்போருக்கு துணையாக இன்று சென்றிருக்கும் மாட்டினுக்கு, தாங்கள் அரசியல் மடலில் கொடுத்த சொல்லடி பலத்த இதய அடியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை—

—மா. சிவா
கொக்குவில் மேற்கு.

●

ஆசிரியவர் அவர்கட்கு:—

"மாட்டினுக்கு மனச்சாட்சியிருந்தால்..." என்ற தொடர் என்னை மிகவும் கவர்ந்தது.

சுதந்திரன் தமிழ் விடுதலைப்போர் ஏடே தவிர தமிழரசுக்கட்சி ஏடல்ல என்பதை தாங்கள் ஐயத்துக்கிடமின்றி நிரூபித்து வருகிறீர்கள்: 'தமிழரசு எம். பீக்கள் எங்கே?' (2. 4. 71) "தமிழரசுக்கட்சி விட்ட தவறு" (30. 7. 71) ஆகிய தலையங்கங்கள் இதற்குச் சான்று.

"இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன் கெடுப்பாரை இன்றிக்கெடும்" என்பது குறள். இடிக்கும் 'கேள்' ஆக சுதந்திரன் அமைந்து விட்டது. இது ஈழத்தமிழர் செய்த தவப்பயனே.

சுதந்திரன் வரலாறு தமிழின விடுதலை வரலாறு; தமிழிலக்கிய மறு மலர்ச்சி வரலாறு; எனவே சுதந்திரனின் 25வது ஆண்டு நிறைவு விழா சிறப்புற அமையவேண்டும். அரசியல், இலக்கியவரலாற்றுப் பெட்டகமாக மலரை வெளியிடவேண்டும் என்பது எமது அன்புக்கட்டளை.

—'பொய்ப்பகையார்'
மட்டக்களப்பு.

●

கோவை அண்ணா,

கடல் மடை திறந்தோடினால் உறுதியற்ற திடர் கரைந்து விடும்; கடல்மடை போல கருத்துமழை நிறைந்த உங்கள் அரசியல் மடல் மாட்டினின் போலித்தனங்களை அம்பலப்படுத்தி மாட்டினின் சுயநலத்தை படம் பிடித்துக் காட்டி விட்டது.

—இரத்தினசிங்கம்
வவுண தீவு.




இரத்தினசிங்கம்,
வவுணதீவு.

கே: ஈழநாடு பத்திரிகை பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: தமிழர்களால் நடத்தப்படும் ஒரேயொரு நாளேடு ஈழநாடு என்பதற்காக அதை மதிக்கிறேன். ஆனால் தமிழினத்தின் பிரச்சினைகளில் தெளிவான கருத்தும் தீர்க்கமான அபிப்பிராயங்களும் இப்பத்திரிகைக்கு கிடையாது. எந்தப் பிரச்சினையிலும் அபிப்பிராயம் கூறாது இரண்டு பக்கமும் பாடும் 'வழவழா' போக்கையும், தமிழ்த்துரோகிகளுக்கு சிந்து பாடும் போக்கையும் இப்பத்திரிகை கைவிடுவது, அதன் வளர்ச்சிக்கும், தமிழினத்துக்கும் நல்லது.

ஃ

தா. விவேகானந்தன்,
திருநெல்வேலி வடக்கு.

கே: இலங்கை சிறு கைத்தொழில் கூட்டுத்தாபனத்தின் 'ஜனதா பீடியை' தமிழ் மக்கள் உபயோகிக்க மறுக்கிறார்களே—இதன் காரணம் என்னவாக இருக்கும்?

ப: பீடியில் கூட தமிழ் புறக்கணிக்கப்படுவதை ஆட்சேபிப்பதற்காக இருக்கலாம்!

கே: இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கும் அகில இந்திய வானொலி நிலையத்திற்குமுள்ள வேறுபாடு என்ன?

ப: தகரடப்பா சங்கீதத்துக்கும் கர்நாடக இசைக்கும் உள்ள வேறுபாடுதான்!

ஃ

பொன். சவுந்தரராசன்,
புங்குடுதீவு-3.

கே: தமிழரசுக்கட்சியை சிலர் மட்டிக்கட்சி என்று ஏளனம் செய்கிறார்களே?

ப: 'மட்டிகள்' அப்படித்தானே கூறுவார்கள்? விட்டுத்தள்ளுங்கள்!

கே: தமிழரசுக் கட்சியினால் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்காதாம்; ஸ்ரீலங்கா சு. கட்சியில் சேரட்டுமாம்; உங்கள் தீர்ப்பு என்ன?

ப: புலியிடம் உறவு கொள்வதால் புள்ளிமானுக்கு இறுதியில் எத்தகைய விமோசனம் கிடைக்குமோ அதே 'விமோசனம்' ஸ்ரீலங்கா சு. கட்சியில் சேர்வதால் தமிழ் மக்களுக்கும் நிச்சயம் கிடைக்கும்!

ஃ

க. குகச்சந்திரன்,
யாழ்நகர்.

கே: 1971ம் ஆண்டுடன் தமிழரசுக்கட்சி ஓய்ந்துவிட்டதாம்; இனிப்போராடாது என்கிறான் என் நண்பன். நான் மறுத்தேன்; நானா அவனா சரி?

ப: 'நேரடி நடவடிக்கை' மட்டுமே போராட்டம் என்பதில்லை. தமிழரசுக் கட்சியின் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஒவ்வொன்றுமே போராட்டம்தான். தமிழரசுக் கட்சி போராட்டங்களைத் தேடி அலையும் கட்சியுமல்ல; போராடவேண்டிய நேரத்[illegible] மல்ல!

ஃ

க. வேலுப்பிள்ளை,
நெளுக்குலம்
வவுனியா.

கே: தமிழரசுக்கட்சி பற்றி நினைக்கும்போது தமிழ்த் துரோகிகளுக்கு எப்படியிருக்கும்?

ப: புண் மீது புளியைத் தடவினால் எப்படி இருக்குமோ அப்படி!

ஃ

கே. ரஞ்சி,
வவுனியா.

கே: திருவாளர் உளறுவாயர் வேலையில்லாமல் உளறிக்கொண்டு திரிகிறார். அதனால் அவருக்கு ஏதும நன்மைகள் உண்டா?

ப: மருமகனுக்கு உத்தியோகம் எடுத்தாயிற்று; இனி இவருக்கு உத்தியோகம் கிடைக்கவேண்டாமா? அதனால்தான் உளறிப்பார்க்கிறார்!

கே: காவடித் தியாகருக்கும் அண்ணா அமிர்தலிங்கத்துக்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப: காவடி எட்டப்பன்; அமிர்தலிங்கம் கட்டபொம்மன்!

கே: சிமோல் அருளம்பலத்தின் பொழுதுபோக்கு என்ன?

ப: சிமோல் விஷயங்களுக்காக சிமோல் மந்திரிகளைக் காக்காய் பிடிப்பது!

ஃ

க. விஸ்வலிங்கம்,
விநாயகபுரம்.

கே: உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் மனிதனுக்கு தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் பழக்கத்தை மனிதன் கைவிடாவிட்டால், மனிதப் படைப்பில் இறைவன் மாற்றம் செய்யலாம்—அதாவது 'உள்ளத்தை' உள்ளே வைக்காமல் எல்லோரும் காணக்கூடியதாக வெளியே வைத்து விடலாம்!

ஃ

கே. எஸ். செல்வராசா,
கோண்டாவில்.

கே: துரோகிகள் இல்லாத தமிழ் சமுதாயம் தோன்றுமா?

ப: ஒவ்வொரு தமிழனும் மொழி, இனப்பற்றுள்ள உண்மைத் தமிழனாக வாழ உறுதிகொண்டுவிட்டால் துரோகிகள் ஒருபோதும் நம் சமுதாயத்தில் தோன்றவே மாட்டார்கள்!

ஃ

தமிழ்நந்தன்,
முருங்கன்.

கே: வெண்கல சாசனத்தில் சிங்களத்தில் தங்கள் கையெழுத்துக்களைப் போடுவதற்காக முக்காலிகளும் ஏனைய தமிழ்த்துரோகிகளும் இப்போதிருந்தே சிங்களத்தில் பயிற்சிபெறுகிறார்களாமே, உண்மையா?

ப: தமது சிங்கள எஜமான்களைத் திருப்திப்படுத்துவதற்காக இப்படி அவர்கள் செய்தாலும் ஆச்சரியமில்லைத்தான்!

ஃ

சிவபாலன்,
காரைநகர்.

கே: காமராசருடன் ஒப்பிடக்கூடிய இலங்கை அரசியல்வாதிகள் யார்?

ப: காமராசர் இந்திய சுதந்திரப்போரின் போது செய்த தியாகத்துடன் ஒப்பிட்டு இங்கு யாரையும் குறிப்பிட முடியாது. ஆனால் இந்திக்கு ஆலவட்டம் வீசும் அவரது தமிழ்த்துரோகப் போக்கினை அடியொற்றி சிங்களத்துக்கு ஆலவட்டம் வீசுபவர்களே இங்குள்ள தமிழ் காங்கிரஸ் பா. உ. க்களும் குமாரசூரியர், மாட்டின் டோன்றோரும்!

ஃ

நா. கந்தையா,
நீர்கொழும்பு.

கே: சுதந்திரன் ஆசிரியரை தற்புகழ்ச்சிக்காரர் என்கிறேன். காரணம் தனக்கு வரும் புகழ்ச்சிக் கடிதங்களை சுதந்திரனில் பிரசுரிக்கிறார். நீர் என்ன சொல்கிறீர்?

ப: நீங்கள் சொல்வது தவறு என்கிறேன். தனக்கு வரும் புகழுரைகள் அனைத்தும், சுதந்திரனுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் கிடைக்கும் புகழ் என்றே சுதந்திரன் ஆசிரியர் கருதுகிறார்!

ஃ

சதாசிவம், கமலாகரன்,
காரைநகர்.

கே: எமது பாராளுமன்ற உறுப்பினர் அம்மையாரின் காலை நக்க, நாங்கள் இருவரும் தினமும் எம். பி. யின் காலை நக்குகிறோம். எம். பி. க்கு மந்திரி பதவி கிடைக்குமா? எங்களுக்கு வேலை கிடைக்குமா?

ப: இலவுகாத்த கிளி ஆகப் போகிறீர்கள்—ஜாக்கிரதை!

கே: எங்கள் எம். பி. இப்பொழுது 'பக்தி நந்தனார்' பற்றி கோவில்களில் கதாப் பிரசங்கம் செய்கிறார்; இனி என்ன விஷயம் பற்றி பிரசங்கம் செய்யலாம் என தாங்கள் நினைக்கிறீர்கள்?

ப: இராவணனை காட்டிக் கொடுத்த விபீஷணனை பற்றி அவர் கதாப்பிரசங்கம் செய்வது இன்னும் பொருத்தமாக இருக்கும்!

ஃ

சி. ஜானகி,
உடுவில்.

கே: துரையப்பாவுக்கு என்ன இப்போது 'வெள்ளி' திசையா?

ப: 'சல்லி' (சேரும்) திசை!

ஃ
ஃ

ந. கமலராணி,
கட்டுடை.

கே:— தி. மு. க. வின் கொள்கை யென்ன?

ப:—திராவிட மக்களின் முன்னேற்றத்துக்காக உழைப்பது!

கே:— தமிழரசுக்கட்சியின் எதிர்காலத்திட்டம் என்ன?

ப:—தமிழரசுக் கட்சியின் திட்டம் ஒன்றே ஒன்று தான் ஈழத்தமிழ் நாட்டுக்கு தன்னாட்சி காண்பது!

ஃ

சி. சிவதாஸ்.
தொண்டைமன்னார்.

கே:— சுதந்திரன் என்றால் கருத்து என்ன?

ப:— விடுதலைவிரும்பி என்பதுதான்!

கே:— குமாரசூரியர் அண்ணாச்சியின் பல்கலைக்கழகம் என்னாச்சு?

ப:— பிறக்கமுன்பே இறந்துவிட்டது!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194ஏ, பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு—12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனிச் சிங்களச் சட்டத்தினுல் இந்நாடு பிரியப்போவது நிச்சயம்!

மாண்புமிகு அக்கிராசனர் அவர்களே, கௌரவ ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. கா. பொ: இரத்தினம் முன்மொழிந்த திருத்தப் பிரேரணையை நான் வழிமொழிகிறேன்.

இந்த நாட்டிலே பல அரசியற் கட்சிகள் பல ஆண்டுகளாக இயங்கிவந்திருக்கின்றன. இந்த நாட்டிலே உள்ள எல்லா அரசியற் கட்சிகளும் இந்த நாட்டிலே மொழிப் பிரச்சினை இருக்கின்றது; அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற அடிப்படையிலேதான் தங்கள் கருத்துக்களை காலத்துக்குக் காலம் தெரிவித்துள்ளன.

உழைக்கவில்லை. லங்கா சமசமாஜக் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி ஆகியனகூட மார்க்சிஸத்துக்கு விரோதமாக, சோஷலிசத்துக்கு விரோதமாக, இந்த மொழிப் பிரச்சினையிலே தங்களுடைய கருத்தை மாற்றியது மிகவும் வருத்தத்துக்குரிய விஷயம்.

சோஷலிச நாடுகளிலே காணுத முறையிலே சோஷலிசம் ஏற்காத ஒரு கொள்கையை இன்று ஏற்று இந்த நாட்டிலே ஒரு மொழிதான் இருக்க வேண்டும் என்று தங்களுடைய கருத்தை மாற்றியதை — நான் அவர்களைக் கண்டிப்பதற்காக கூறவில்லை மிகவும் வருத்தத்தோடுதான் கூறுகிறேன்.

இடதுசாரி நண்பர்கள் மொழிப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பார்கள்; மொழிப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவார்கள் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்து இருந்தார்கள்; இன்றைக்கு அவர்களும் தங்களுடைய கொள்

மொழிப் பிரச்சினை எங்களுடைய ஜீவியப்பிரச்சினை, இந்நாட்டிலே வாழும் தமிழ் மக்கள், தமிழ் மக்களாக வாழப் போகின்ருர்களா, இல்லையா என்பதைத் தீர்க்கும் பிரச்சினை, இந்நாட்டில் தமிழ் மக்கள் மானத்தோடு வாழப் போகின்ருர்களா, இல்லையா என்பதைத் தீர்க்கும் ஒரு பிரச்சினை. அந்த அடிப்படையில் தான் இந்தப் பிரச்சினையைத் தமிழரசுக் கட்சி நோக்கி, அதனை தீர்க்கப் போராடி வந்திருக்கின்றது.

இந்தப் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாகக் கருதாமல், இதனுல் அரசியலில் கிடைக்கும் லாபங்களை மட்டும் கருதாமல் தீர்க்க வேண்டும், இதைத் தீர்த்தால்தான் இந்நாடு முன்னேற முடியும் என்று அரசியற் கட்சிகளும் அரசாங்கமும் நினைத்தால் தான் இதற்கு ஒரு தீர்வு காணமுடியும்.

இந்தப் பிரச்சினை எப்படி ஆரம்பித்தது, இந்தப் பிரச்சினையின் சரித்திரம் என்ன

சினை வாக்கெடுத்துத்தீர்க்கக் கூடிய ஒரு பிரச்சினையல்ல; சிங்கள மக்களின் வாக்கை எடுத்து இதுதான் சரி, இப்படித்தான் தமிழ் மக்கள் நடக்க வேண்டும் என்று இந்தப் பிரச்சினையை ஒருபோதும் தீர்க்க முடியாது.

லங்கா சமசமாஜக் கட்சி 1955 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வெளியிட்ட தங்கள் பிரகடனத்தில் நான்காம் பக்கத்தில் கூறிய கூற்றை வாசித்துக்காட்ட விரும்புகின்றேன்:

"It is necessary at this stage to stress that this question cannot properly be decided by means of counting heads."

"It would not be a method of democracy at all merely to count heads and discover the numerical majorities in order to decide problems of race relations within a country or a nation."

இந்தப் பிரச்சினையை வாக்கெடுப்பால் தீர்க்க முடியாதென்று சமசமாஜக்கட்சி 1955 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் கூறியது என அதனுல் நான் கூறினேன்.

இந்த நாட்டிலே வாழ்கின்ற சிங்கள மக்கள் அத்தனை பேரும் சேர்ந்தாலும் இந்தப் பிரச்சினையை வாக்கெடுப்பால் தீர்க்க முடியாதென்பதைத் தயவு செய்து ஒவ்வொருவரும் மனதில் வைத்திருக்க வேண்டும். சிங்கள மக்கள் எல்லோரும் சேர்ந்து "இதுதான் சரி, இதை நீங்கள் ஏற்க வேண்டும்" என்று தமிழ் மக்களுக்கு கட்டளை இட அவர்களுக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை.

அதுமட்டுமல்ல; 1955ஆம் ஆண்டிலே அதே பிரகடனத்திலே சமசமாஜக்கட்சி ஏற்றுக்கொண்டது தனிச் சிங்களச் சட்டத்தினுல் இந்த நாட்டை ஒருபோதும் ஒற்றுமையாக்க முடியாதென்று.

யிலும் மொழிப் பிரச்சினை பற்றித் தாராளமாகப் பேசியிருக்கிருர்கள். தனிச் சிங்களக்கொள்கையை தீவிரமாக அமுல் ஆக்குவதில் எந்த விதமான மாற்றமும் இல்லாவிட்டால் நாடு ஒருபோதும் ஒற்றுமையடையமாட்டாது. நாடு இறுதியில் இரண்டாகப் பிரிந்து விடும் என்பதைத் தயவு செய்து நீங்கள் உணரவேண்டும்.

எங்களைப் பொறுத்தவரையிலே இந்த நாடு ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இரண்டு மொழிகளுக்கும் இடம் தரவேண்டும் என்று கேட்கிருேம். இந்த நாட்டின் ஒற்றுமையிலே உள்ள ஆசையினுலே—அக்கறையினுலே தான் இந்த நாட்டிலே இரண்டு மொழியும் இருக்க வேண்டும் என்று கேட்கிருேம் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தனியொரு மொழியால் ஒருபோதும் நாட்டை ஒற்றுமைப்படுத்த முடியாது. அது நாட்டைப் பிரித்து விடும் என்பதை மறந்து விடாதீர்கள். இன்றைக்கு லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் மொழி அடிப்படையிலே தங்களுடைய கொள்கையை மாற்றியதாலே ஒரு வேளை அந்தப் பிரச்சினை ஒருபோதும் தீராதோ என்ற ஐயம் எங்கள் மத்தியில் எழுகிறது.

சோவியத் நாட்டினுடைய சரித்திரத்தை எடுத்தாலும் சரி, மற்றைய நாடுகளுடைய சரித்திரத்தை எடுத்தாலும் சரி அங்கேயுள்ள தலைவர்கள் எது சரி என்று கருதினுர்களோ அந்தச் சரியான பாதையை மக்களுக்கு விளக்கிக்காட்டி மக்களை அந்தப் பாதையிலே இழுத்துச் சென்ருர்களே தவிர மக்கள் சென்ற பாதையிலே, அவர்கள் பிழையான பாதையில் சென்ற சமயத்திற்கூட, சோஷலிச நாட்டின் தலைவர்

## இதை சமசமாஜிகளே ஒப்புக்கொண்டிருக்கிருர்கள்!

ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் ஒவ்வொரு அரசியற் கட்சியும் அதன் தேர்தல் பிரகடனத்திலே மொழிப் பிரச்சினை பற்றிக் கூறி அதற்கு எவ்விதம் தீர்வு காணவேண்டும் என்றும் கூறியுள்ளன.

ஒருவேளை அவர்கள் குறிப்பிட்ட மார்க்கம் தேர்தலுக்குத் தேர்தல் மாறி இருக்கலாம் அன்றன்று இருந்த அரசியற் சூழ்நிலையைப் பொறுத்து தங்களுடையமொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் மார்க்கத்தைப்பலர் மாற்றியிருக்கலாம். ஆனுல் ஒவ்வொரு தேர்தல் பிரகடனத்திலும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் மொழிப் பிரச்சினை இருக்கிறது; இந்த மொழிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றது. ஆகையால் மொழிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பது பிரச்சினைக்கு உரிய விஷயம் அல்ல.

மொழிப் பிரச்சினை இருக்கிறது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள் கிருர்கள். இந்த நாட்டிலேயுள்ள அரசியற் கட்சிகள், முக்கியமாக அரசாங்கத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று உழைக்கின்ற கட்சிகள் எல்லாம் இந்த மொழிப்பிரச்சினையை தாங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு

கையை மாற்றி இந்த நாட்டில் ஒருமொழிதான் இருக்க வேண்டும் என்று சொல்லி நடப்பது மிகவும் வேதனைக்கு உரிய விஷயம்.

எல்லா அரசியற் கட்சிகளும், நான் கூறியதுபோல தாங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இந்தப் பிரச்சினையை ஒரு கருவியாகத்தான் பாவித்தார்கள். அப்படிப் பாவித்ததால்தான் ஒரு அரசியல் கட்சி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்று கருதி ஏதாவது நடவடிக்கை எடுத்தால் மற்ற அரசியல் கட்சிகள் அதை எதிர்க்க ஆரம்பித்து விடுகின்றன.

1965 ஆம் ஆண்டு கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்க அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு ஒப்பந்தத்தை எழுதினுர்கள் அதன்படி நடந்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று நினைத்தார்கள். அந்த நேரத்திலே இந்தப் பிரச்சினையைத் தீர்த்து விட்டால் தங்களுக்கு அரசியலிலே இலாபம் கிடையாது என்று கருதி, ஐக்கிய தேசியக் கட்சி அதை எதிர்த்தது.

அதே போல், 1966 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி இந்தப் பிரச்சினையைத்

என்பன பற்றி எம்மால் எடுத்துக்கூற முடியும். அவற்றிலே ஒருசில விஷயங்களை அழுத்தந் திருத்தமாக நாம் கூறிவைக்கவேண்டும்.

முதலாவது, மொழிப்பிரச்சினை, தமிழ் மக்களுடைய பிரச்சினை மட்டுமல்ல. அது ஒரு தேசியப் பிரச்சினையென்பதை நாம் எல்லோரும் உணரவேண்டும். அப்படி உணர்ந்து நடந்தால்தான் நாம் இதனைத் தீர்க்கச் சுலபமான வழியைக் காண முடியும். மொழிப் பிரச்சினை, ஒருவேளை இந்நாட்டில்

## தமிழையும் ஆட்சிமொழியாக்கினுல் மட்டுமே நாட்டுப் பிரிவினையை தடுத்திட முடியும்!

வாழும் தமிழ்பேசும் மக்களைத்தான் மிகவும் பாதித்தாலும், அவர்களுக்குத்தான் அது அதிக கஷ்டங்களை விளைத்தாலும் அவ்வளவோடு அது நிற்கப்போவதில்லை. மொழிப் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினையாகதால் இந்நாட்டிலே வாழும் அத்தனை பேருக்கும் அது கஷ்டத்தை விளைவிக்கும்.

ஒரு மனிதனுடைய உடலிலே ஓர் அங்கத்தில் குறைவு வந்துவிட்டால் - அல்லது காயம் வந்துவிட்டால் முழு உடலும் அதனுல் தாக்கப்படுகின்றது. அதேபோன்றுதான் மொழிப் பிரச்சினையால் தமிழ் மக்கள் தான் தாக்கப்பட்டாலும், அவர்கள்தான் கஷ்டப்பட்டாலும் இந்நாட்டிலே வாழும் அத்தனை பேருக்கும் அது கஷ்டத்தை விளைவிக்கும். அத்துடன் இந்நாட்டின் முன்னேற்றத்துக்கும் நல்வாழ்வுக்கும் அது இடைஞ்சலாக இருக்கும் என்பதை எவரும் மறுக்க முடியாது அதனை மனத்திற்கொண்டுதான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இரண்டாவதாக, 1955 ஆம் ஆண்டிலே லங்கா சமசமாஜக் கட்சி மொழிப் பிரச்சினையைப் பற்றி வெளியிட்ட ஒரு பிரகடனத்திலே கூறியதைப்போல, இந்தப் பிரச்

தனிச் சிங்களச் சட்டம் இந்த நாட்டை இரண்டாகப் பிரித்து விடும் என்பதை 1955 ஆம் ஆண்டிலே சமசமாஜக் கட்சியினர் ஏற்றுக்கொண்டு, அதை நான் இப்பொழுது வாசித்த பிரகடனத்திலே தெரிவித்தும் இருக்கிருர்கள்.

அவர்கள் கூறியது என்ன?

"We should never forget that the Sinhalese and Tamil languages are also the languages of different races and further that these occupy different and separate parts of our country."—

"Therefore separatist tendencies once allowed to arise and develop can culminate readily in a division of the country into two separate states."

தனிச் சிங்களச் சட்டத்தை ஆதரிக்கின்றவர்கள் கூறுகிருர்கள் தனிச் சிங்களத்தினுல் நாட்டை ஒற்றுமைப்படுத்தலாம் என்று. தனிச் சிங்களத்தாலே இந்த நாட்டை ஒற்றுமைப்படுத்துவதற்காகத்தான் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தோம் என்று கூறுகிருர்கள். 1955 ஆம் ஆண்டு தொடக்கம் எத்தனையோ ஆண்டுகளாக லங்கா சமசமாஜக் கட்சியினரும் கம்யூனிஸ்ட் கட்சியினரும், பாராளுமன்றத்திலுள்ளும் வெளி

கள் செல்லவில்லை என்பதை சோஷலிசம் பேசும் நண்பர்கள் உணரவேண்டும்.

### லெனின் காட்டியவழி

சோவியத் நாட்டைப் பொறுத்த வரையிலே அந்த நாட்டின் புரட்சிக்குப் பல ஆண்டுகளுக்கு முன் அந்த நாட்டிலே ஒருமொழி இருக்க வேண்டுமா, அல்லது பல மொழிகள் இருக்க வேண்டுமா என்ற பிரச்சினை மிகத் தீவிரமாக எழுந்தது. The Liberal and Social democrats அந்த நாட்டிலே ஒரு மொழி தான் இருக்கவேண்டும்; ஒரு மொழிக்குத்தான் நாடு உரித்தாகவேண்டும், ருஷிய மொழிதான் அந்த மொழியாக இருக்க வேண்டும் என்றும் கங்கணம் கட்டி நின்ருர்கள்; நாட்டில் ஒரு மொழி இருந்தால்தான் ருஷிய நாடு ஒற்றுமைப்படும் என்று கூறினுர்கள்.

அன்று அங்கே இருந்த தலைவர்கள் — போல்ஷெவிக்ஸ் — இதை எதிர்த்தால் தங்களுக்கு ஆபத்து வந்துவிடும், இதனை எதிர்த்தால் தாங்கள் முன்னேற முடியாது என்று நினைக்கவில்லை. "சோஷியல் டிமொக்ரட்ஸ் அன் லிபரல்ஸ்" போகும் வழி சரியல்ல, அதை எதிர்த்து சரியான பாதையை மக்களுக்குக்

(11ம் பக்கம் பார்க்க)

## அரசியல் நிர்ணயசபையில் உடுவில் பா.உ. எச்சரிக்கை!

கருவியாகத்தான் கருதி நடத்து வந்திருக்கிருர்கள் என்பதை எங்களுடைய அரசியற் சரித்திரம் எடுத்துக் காட்டுகின்றது.

இந்தப் பிரச்சினையை வைத்து—இந்தப் பிரச்சினையைப் பாவித்து — தாங்கள் அரசாங்கத்திலே அதிகாரத்தைப் பெறலாம் என்று கருதித்தான் நடந்து வந்திருக்கிருர்களே தவிர இந்தப் பிரச்சினையை நாட்டுக்காக, நாட்டினுடைய நன்மைக்காகத் தீர்த்து வைக்க வேண்டும் என்று ஒருவராவது

தீர்க்க வேண்டும் என்று எங்களோடு ஒற்றுமைப்பட்டு உழைத்து வருகிற நேரத்திலே கூட்டுக் கட்சியினர் அதை எதிர்த்தார்கள். தங்களுடைய அரசியல் இலாபத்துக்காகத்தான் இந்த நாட்டிலுள்ள அரசியற் கட்சிகள் இந்தப் பிரச்சினையைப் பாவித்து வந்ததால் இந்தப் பிரச்சினை இந்த நாட்டில் தீர்க்க முடியாத பிரச்சினையாக வந்துவிட்டது.

தமிழரசுக்கட்சியைப் பொறுத்த வரையில் மொழிப்பிரச்சினை ஒரு தேர்தற் பிரச்சினையல்ல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரிகளையும் மதிக்கும் பண்பாளர்! இனத்துக்காக எண்ணற்ற தியாகம் புரிந்தவர்!!

## தமிழரசுத் தந்தைக்கு வழக்கறிஞர் எஸ். சுப்பிரமணியம் புகழ்மாலை

தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகர்களில் அடியேனும் ஒருவனாக இருந்தேன்.

திரு. செல்வநாயகத்தை அரசியலில் சம்பந்தப்படுத்தி இணைத்தபொழுது அடியேன் காங்கிரஸ் கட்சியின் கூட்டுக்காரியதரிசியாகவும் இருந்து கடமையாற்றிவந்தேன். அப்பொழுது டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனும், திரு. ஜி. ஆர். மோத்தாவும் காங்கிரஸின் கூட்டுக்காரியதரிசிகளாக இருந்து செயலாற்றிவந்தார்கள். திரு. செல்வநாயகத்துக்கும் காங்கிரஸ் கட்சியில் முக்கிய இடமளிக்கப்பட்டிருந்தது.

தமிழர் நலனையும் இலங்கையின் நன்மையையும் காக்கும் பிரதான நோக்கமே எங்கள் எல்லோரினதும் இலட்சியமாக இருந்தது. அதை அடையும் மார்க்கத்திலும் கடைப்பிடிக்கும் கொள்கைகளிலும் காலச்சக்கரம் இன்று நம்மை பல பாதைகளில் இட்டுச் சென்றுவிட்டது.

சிங்களக் கனவான் ஒருவர் (இவர் பின்பு பிரதம நீதியரசராக வந்தவர்) திரு. செல்வநாயகம் பற்றி என்னிடம் ஒரு சமயம் பிரஸ்தாபிக்கையில் 'உங்கள் மத்தியில் (தமிழ் வழக்கறிஞர் மத்தியில்) உள்ளவர்களில் திரு. செல்வா மிக உத்தமமானவர்' என்று அன்று கூறியிருந்தார். அரசியலுக்கு திரு. செல்வநாயகத்தை அடியேன் சம்பந்தப்படுத்திய அக்காலத்தில் அவர் அத்துவக்காத்துத் துறையில், மிகமேம்பட்டு விளங்கினர். அதுமட்டுமல்ல சகல இன மக்கள் மத்தியிலும் அவருக்கு மதிப்பு இருந்தது. வழக்கறிஞர்கள், அத்துவக்காத்துக்கள், நீதிபதிகள் முதலான சகலரும் அவர் மீது அதிக அன்பும், மதிப்பும் வைத்திருந்தார்கள். 'செல்வா' என்றே அவரை எல்லோரும் நாவால் தேன் ஒழுக அழைத்து வந்தார்கள்.

இந்தக் காலத்தில் இருக்கிற மாதிரித்தான் அந்தக் காலத்திலும் தமிழருக்கு சோதனைமிக்க காலமாக இருந்தது. அப்பொழுது இருந்துவந்த நெருக்கடிகள் இப்பொழுது கூடிவந்திருக்கின்றன. வித்தியாசம் இதுதான். தமிழர்களின் நலன் படிப்படியாக பாதிக்கப்படுவதை உணர்ந்தே திரு. செல்வநாயகம் அரசியலில் பிரவேசித்தார். அதற்காக அந்த இளம் பராயத்திலேயே சகல சுகங்களையும் பொருட்களையும் இழக்க சித்தமாகி துணிந்திருந்தார்.

அவரிடமுள்ள பண்புகளில் மிக உயர்வானது பணத்தில் நாட்டமில்லாத செயல்.

தன்னிலும் வயது கூடியோரை மதிக்கும் பண்பு அவரிடம் கூடிப் பிறந்தது. தனது எதிரியைக் கௌரவிக்க அவர் தவறியது கிடையாது.

இச்சந்தர்ப்பத்தில் அன்று நடந்த சம்பவமொன்றைக் கூறவிரும்புகிறேன்.

அதாவது திரு. ஜே. ஏ. பெரேரா என்பவர் அன்று பிரபல வழக்கறிஞர். அனுபவமும் ஆற்றலும் மிக்கவராக விளங்கியவர். நீதவான்மார்கூட அறிந்திராத சட்ட நுணுக்கங்களை நன்கு தெரிந்துவைத்திருந்தவர் இவர்.

இவரும் திரு. செல்வநாயகமும் காணிவழக்கொன்றில் எதிரும் புதிருமாக தோன்றி வாதாடினர்கள். திரு. செல்வநாயகத்தின் புரக்டராக நான் ஏற்பட்டிருந்தேன். இந்த வழக்கு தொடர்ந்து 21 நாட்கள் விவாதிக்கப்பட்டது. திரு. பெரேராவுக்கு தனது வாதத்திறமை எடுபடாதது கண்டு சினந்து, எரிந்துவிழத் தொடங்கினர்.

திரு. செல்வநாயகத்தையும் அடியேனையும் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசமுற்பட்டார்.

இது திரு. செல்வாவுக்கும் எனக்கும் பிடிக்கவில்லை. அருகில் இருந்த என்னை நோக்கி நண்பர் பேசக்குக் கூடுகிறது இல்லையா? என்று கேட்டார்.

நான் 'ஆம்' என்றேன். அடுத்தகணம் 'செல்வா' தொடர்ந்தார்:—

நண்பர் பெரேராவின் நரைமயிருக்கு நான் மதிப்பளிக்க வேண்டியவனாயிருக்கிறேன். இல்லையேல் அவரைப் போல, அதே தோரணையில் என்னாலும் மறுத்தான் கொடுக்க முடியும். அது எனக்கு விருப்பமில்லை' என்றூர் திரு. செல்வா.

என்ன அர்த்தபுஷ்டியான, இரத்தினச் சுருக்கமான பேச்சு. நீதிபதி சிரித்தார்.



வழக்கறிஞர் பெரேரா என்னை மன்னிக்குக' என்று கூறி தமது சினத்தை அடக்கிக் கொண்டார். அதன் பின் திரு. பெரேரா தனது வார்த்தைகளை மிக அடக்கமாக பிரயோகித்தார்.

திரு. செல்வநாயகத்தின் கொள்கைகள் சிலவற்றை நான் முற்ருக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அவரை மறக்க முடியாது. அவர் தமிழ் இனத்துக்காக பல தியாகங்களைச் செய்திருக்கிறூர்.

(8-8-71 வீரகேசரி கட்டுரையில்)

# தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து இருக்கிறதா யாரை ஏமாற்றுகிறூர் அமைச்சர்?

அண்மையில் யாழ்ப்பாணத் தொகுதிச் சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளையின் ஆண்டு விழாவில் விசேட விருந்தினராகக் கலந்து பெருமை கொடுத்துப்பேசிய தபால் தந்தி அமைச்சர் குமார சூரியரின் பேச்சு பைத்தியகாரனுடைய பேச்சுப்போல இருக்கிறது.

பைத்தியம் முற்றிய ஒருவன்—குடிபோதையால் மதிமயங்கிய ஒருவன் எசமானை மகிழ்விப்பதற்கு மானம் இழந்து சுய அறிவுகெட்டுப் பிதற்றும் அடிமை ஒருவன் பேசும்பேச்சாக அமைந்துள்ளது. "யாரிடம் யார் உரிமை கேட்பது" என்று வினாசும் குமாரசூரியர் யார்? யாரை ஏமாற்றப் பார்க்கிறூர்? இன்று இலங்கையில் தமிழர் குடி உரிமை, நிலவுரிமை, ஆட்சியுரிமை மொழி உரிமை எல்லாம் இழந்து அவலப்படுகிறூர்கள் என்பது அவருக்குத் தெரியாதா? இன்றுதான் வேறெங்கோ இருந்து விட்டு முதன் முதலாக இலங்கையில் குதித்திருக்கிறூரா? இந்நாட்டில் வாழும் சிங்கள மக்களுக்கு இருக்கும் வாய்ப்பும் வசதியும் ஆட்சியும் அதிகாரமும் மதிப்பும் மரியாதையும் தமிழ் மக்களுக்கு. உண்டா?

இந்த நாட்டில் தமிழன் இரண்டாயிரம் ஆண்டு மட்டுமன்று ஐயாயிரம் ஆண்டு வாழ்ந்தான் என்று குமாரசூரியர் பொச்சடிப்பதால் தமிழர் சிங்களவருடன் சரிநிகர் சமனுக வாழ வழி பிறந்து விடுமா? இலங்கையைத் தமிழன் ஆளவில்லையா? ஐரோப்பியர் இலங்கையை அடிமைப்படுத்து முன் யாழ்ப்பாணத்தில் தமிழரசு ஆட்சிசெய்யவில்லையா? இன்று தமிழரா சிங்களவரா இந்த நாட்டை ஆளுகின்றூர்கள். அமைச்சரவையில் பேருக்கு இருக்கும் குமாரசூரியர் தமது தபால் தந்தித் திணைக்களங்களிலே முழுமையாக ஆட்சி செய்கின்றூரா? சர்வம் சிங்கள மயமாக இருக்கும். இத்திணைக்களங்களில் தமிழுக்கு இடம் கொடுக்க முடியாது இருக்கும் இவருக்குத் தமிழர் உரிமை பற்றிப் பேச உரிமை உண்டா?

தமிழ்ப்பிரதேசமாகிய யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க அலுவலகங்களில் சிங்களமும் ஆங்கிலமும் ஆட்சி செய்கின்றன. தமிழ் மொழிக்கு இடம் இருக்கிறதா? தமிழ் எங்களிடம் இருக்கிறது போதாதா என்பார் குமாரசூரியர். ஐயா குமாரசூரியரே! சிங்கள அமைச்சர்கள் எல்லோரும் பாராளுமன்றத்திலே பெரும்பாலும் சிங்களத்திலேதான் பேசுகின்றூர்கள். நீங்கள் இன்று வரை ஒரு நாளாகுதல் செனேற்றில் தமிழிலே பேசினீர்களா? தெரியாமல் கேட்டுவிட்டேன். தமிழை உம்முடைய உள்ளத்துக்குள் பாதுகாப்பாகப் பூட்டி வைத்து இருக்கிறீராக்கும்!

உமது சக அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தமிழில் எழுதுவோருக்குத் தமிழ்மொழி பெயர்ப்புக் கூட அனுப்பமாட்டேன் ஆங்கிலமொழி பெயர்ப்புத்தான் அனுப்புவேன் என்று அடம் பிடிக்கிறூரே இதைக் கேட்டுக் கொண்டும் அமைச்சரவையில் ஒட்டிக்கொண்டிருக்கும் உமக்குத் தமிழரின் உரிமை பற்றிப்பேச என்ன உரிமையுண்டு?

ஐயா சூரியரே! நீர் தமிழரைப் பற்றிச் சிந்திக்கமுன் திடீர் அமைச்சராகும் முன் இந்த நாட்டில் 1944 தொடக்கம் 1956 வரை சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகள் என்று ஒரு சட்டம் நடைமுறையிலிருந்ததை அறிய மாட்டீர்களா? இச்சட்டம் இந் நாட்டில் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமமான ஆட்சி உரிமையைக் கொடுத்தது என்பதைத் தானும் அறிந்து கொள்ளும் ஆற்றல் உமக்கு இல்லையா?

நீர் ஒட்டிக்கொண்டு இருக்கும் சி. சு. கட்சியின் தாபகர் 1956இல் கொண்டு வந்து நிறைவேற்றிய சிங்களம் மட்டும் சட்டத்தால் தமிழ் மொழியின் ஆட்சி உரிமை பறிக்கப்பட்டது தெரியாமல் குலைக்கின்றீரே!

1958 ஆம் ஆண்டில் தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கே என்று கூறித்துள்ளுவீர்! ஆனால் இந்தச் சட்டம தமிழ் மக்களை ஏமாற்ற—பேய்க்காட்ட ஆக்கப்பட்ட சட்டம் என்பதை இன்னும் நீர் அறியவில்லையா? இந்தச் சட்டத்தால் இன்று வரை தமிழர் அடைந்த நன்மை ஒன்றைக் கூறுவீரா?

பிரமாணங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாவிட்டால் இந்தச் சட்டம் செல்லாது. 1966இல் நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழிப் பிரமாணங்களை நடைமுறைப் படுத்த மாட்டோம் என்று பாரறியப் பாராளுமன்றத்தில் உங்கள் கட்சி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க கூறிவிட்டாரே! இதனுல் தமிழ் மொழிச்சட்டம் என்ற செல்லாக்காசை பத்தரை மாற்றுத் தங்கம் என்றும் கூறித தமிழரை ஏமாற்றும் தமிழ் இனத்துரோகிகளின் தலைவராக விளங்கும் நீங்கள் தமிழன் என்ன உரிமையை இழந்துவிட்டான் என்று பிதற்றுவதை மானமுள்ள தமிழர் பொருட்படுத்துவார்களா?

தன்தாய்மொழி மூலம் தமிழிலே அரசாங்கத்துக்குக் கடிதம் எழுதும் தமிழன் ஒருவனுக்குத் தன்தாய் மொழியில் மறுமொழி பெறும் உரிமை இந்நாட்டில் இல்லை என்பது உமக்குத் தெரியாமலா இருக்கின்றது. அமைச்சராகிய உமக்குத் தமிழில் எழுதப்படும் உத்தியோகபூர்வமான கடிதங்களில் ஒன்றுக்கேனும் தமிழில் மறுமொழி அனுப்பும் துணிவும் பண்பும் பற்றும் இல்லாத நீர் தமிழ் மக்களின் சார்பில் பேச முற்படுகின்றீரே! காட்டிக்கொடுக்கும் கைங்கரியத்தைச் செய்பவர்கள் அன்றும் இன்றும் மட்டுமன்றி என்றும் இருப்பார்கள். ஆனல் இனத்தைக்காட்டிக்கொடுத்து தாய்மொழி உரிமையை விற்றுப் பிழைக்கும் துரோகிகள் இன உரிமைக்காகப் பேச முற்படுதல் இரவைப்பகலெனக்கூறி மயக்கும் மாயாவிகளின் செயல் போன்றது!

# தினபதியாரே வாலைச்சுருட்டு! மூதூர் தமிழ் மக்களையும் என்னையும் பிரித்துவிட உன்னல் முடியாது!

### தங்கத்துரை மீண்டும் சாட்டை!

"தமிழரசுக் கட்சியிலிருந்து நான் விலகப் போவதாக புருடாச்செய்திகளை வெளியிட்டு, அதன் காரணமாக என்னுல் மூக்கறுக்கப்பட்ட தினபதியார் இப்போது மூதூர் தொகுதி வாழ் தமிழ்மக்களையும் என்னையும் பிரித்துவிடும் நோக்குடன் நாளாந்தம் பொய்க்கு



மேல் பொய்யாக எழுதி வருகிறூர். மூதூர்த் தொகுதி தமிழ் மக்கள் என் உள்ளத்தை நன்கு அறிந்தவர்கள். என்னை நனருகப்புரிந்தவர்கள். தமிழரசுக்கட்சியிலூறித் திளைத்திருப்பவர்கள். அவர்களையும் என்னையும் பிரித்துவிட — அல்லது அவர்களுக்கும் எனக்கும் குரோதம் மூட்டி தினபதியார் மட்டுமல்ல தின

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகம்

## மாட்டின் மனச்சாட்சி

"பொய்ப்பகையார்"

உழுதுகொண்டிருந்த செங்காரி மாட்டின் மனச்சாட்சி உறுத்திக் கொண்டேயிருந்தது: 'பசும்புல்லை வளர்த்து எனக்கு உணவூட்டிய நிலத்தை ஈவு இரக்கமின்றிக் கிழித்துக் குதறும் ஏரின் செயலுக்கு உதவுவதா? அன்னமிட்டவருக்குத் தீமைசெய்வதா?' 'உழவன் உனது தலைவன்: அவன் எல்லாம் அறிந்தவன்; பட்டறிவு மிகுந்தவன்; அவன் முடிவு, செய்கை எல்லாம் சரியாகவே இருக்கும்.' '-செங்காரி மாட்டின் உள்ளத்தின் வேறொரு பகுதி இடித்துரைத்தது. 'எனது மனச்சாட்சியே எல்லாவற்றிலும் மேலானது: நான் மனச்சாட்சியின் படியே நடப்பேன்.'—ஏரின் வலக்கையிற் பூட்டப்பட்ட செங்காரி உறுதியாக முடிவு செய்து கொண்டது:

இடக்கையிற் பூட்டப்பட்ட சுட்டியனைப் பார்த்தது செங்காரி. 'நண்பா, உழவன் செய்யும் அநீதியை இன்னும் பார்த்துக் கொண்டிருக்கலாமா?' சுட்டியனுக்கு ஒன்றும் புரியவில்லை. 'என்ன?' என்பதுபோல அது செங்காரியைப் பார்த்தது. 'நிலமகளைக் கீறிக்கிழிக்கும் கருணையற்ற செயலை நாம் பார்த்துக் கொண்டிருப்பதா? அநீதிக்குத் துணை போவதா? எனது மனச்சாட்சி ஒப்புக்கொள்ளவில்லை; 'செங்காரி தன் மனச்சாட்சியில் தோன்றியதை எடுத்துரைத்து ஆதரவு தேடமுயன்றது:

செங்காரியைப் போலச் சுட்டியனும் நேற்று வந்ததல்ல. அது பல ஆண்டுகள் உழவனுடன் உழைத்தது. இன்பம் துன்பம் அனைத்திலும் அது அவனுடன் பங்கு கொண்டது: மனச்சாட்சி தெய்வீகமானதல்ல! தவறிழைக்கக் கூடியதென்பதை அது நன்குணர்ந்தது. 'தலைவன் எல்லாம் அறிந்தவன். நாம் வாழ, உழவனின் குடும்பம் வாழ, உலகம் வாழ என்ன செய்யவேண்டும் என்பதை அவன் அறிவான்: உனது மனச்சாட்சியை மூடிவை; அவன் கட்டளைப்படி நட.' —சுட்டியன் உண்மையை உரைத்தது: செங்காரியின் மனச்சாட்சி உறுத்திக் கொண்டேயிருந்தது.

மாடுகளின் வேகம் குறைவதைக்கண்ட உழவன் செங்காரியின் முதுகில் 'கேட்டியால் ஒன்று கொடுத்தான். செங்காரி வேலைநிறுத்தம் செய்தது: உழவன்' ஓ... அம்மா...!' என உரப்பினான்: செங்காரி சத்தியாக்கிரகம் தொடங்கியது. சுட்டியன் அதற்கு அறிவுபுகட்ட முயன்றது செங்காரி திரும்பிச் சுட்டியனுடன் மோதியது.

கோடையின் கொடுமையால் பிளவுபட்டுக் கிடந்த நிலம் அப்பொழுதுதான் பெய்துவிட்டிருந்த மழையின் காரணமாக வெடிப்புக்கள் மறைந்து ஒன்ருகி ஈரலிப்பாகிக் கிடந்தது.

(10ம் பக்கம் பார்க்க)

# ● செல்வாவைவிட சிறந்த ஜனநாயகவாதி வேறு எவருமே இல்லை!

# ● தமிழரசுக் கட்சியைச்சேராத பா.உ.க்கள் அனைவரும் கையாலாதவர்கள்!

## மார்ட்டினே ஒப்புக்கொள்ளும் உண்மைகள் இவை!

"அரசியல் நிர்ணய சபைக்கூட்டங்களில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எம். பிக்கள் தொடர்ந்தும் பங்கு பற்றுவதா வேண்டாமா என்ற பிரச்சினை எழ, அரசியல் நிர்ணயசபையைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்று தமிழரசுக் கட்சிப்பொதுக்குழு முடிவு செய்ய, அந்த முடிவுக்கு மாருக யாழ்ப்பாணத் தொகுதி எம். பி. கிரில் சேவியர் மார்ட்டின் நடந்து கொள்ள, ஈழத்துத் தமிழ் அரசியல் உலகில் கொஞ்சம் சூடுபிடித்திருக்கிறது.

"இது சம்பந்தமாக, செல்வநாயகத்திற்கும் மார்ட்டினுக்கும் இடையில் நடைபெற்ற கடிதப் போக்குவரத்துக்கள், மிகப் பிரமாதப்படுத்தப்பட்டு பகிரங்கமாக பத்திரிகைகளிலும் வெளிவந்து இருக்கின்றன.

"செல்வநாயகத்திற்கு எழுதிய கடிதம் ஒன்றில் "கட்சியின் முடிவுக்கு கட்டுப்படவேண்டும் என்ற உங்களின் ஆவல் நீங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு வழிகோலிய போதிலும், நீங்களே எனது கருத்துக்கு உடன்பட்டவர்போல இருந்தீர்கள் என்பதை நான் அறிவேன்" என்று மார்ட்டின் குறிப்பிட்டு இருக்கிருர்.

இது எதைக் காட்டுகிறது?

செல்வநாயகம் ஒரு மிகச் சிறந்த ஜனநாயகவாதி என்பதையல்லவா இது காட்டுகிறது!

மார்ட்டின் என்ன சொல்லுகிருர் — செல்வநாயகத்தின் கருத்துக்கூட அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரிக்கக்கூடாது என்பதுதானும். ஆனல் கட்சியிலுள்ள பெரும்பான்மையினரின் கருத்துப்படி அவர் தனது முடிவை மாற்றிக்கொண்டு விட்டாராம்— இப்படித்தானே சொல்கிருர்!

### 'வெள்ளி' ஏடு எழுதுகிறது இப்படி!

தமிழர்களின் உரிமைப் பிரச்சினைகளில் அக்கறை காட்டும் ஒரு கட்சியின் தலைவர், மெத்தப் படித்தவராக இருந்தும் கூட, அவர் சொன்னல் மறு பேச்சின்றி அதனை அப்படியே ஏற்றுக்கொள்வதற்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தயாராக உள்ள நிலையிலும் கூட, தனது கருத்துக்களைத் திணிக்க முற்படாது, இந்த மாதிரியான விஷயங்களை முடிவு செய்வதற்கு என்று அமைக்கப்பட்ட பொதுக் குழுவின் முடிவுக்குக் கட்டுப்பட்டு நடக்கிருர் என்ருல், அவரை விடச் சிறந்த ஜனநாயக வாதி யார் இருக்க முடியும்!

மார்ட்டின் இன்னுமொரு விஷயத்தையும் தனது கடிதம் ஒன்றில் குறிப்பிடுகிருர். "தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை மனப்பூர்வமாக வலியுறுத்தக் கூடிய தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் சபையில் இருப்பது நன்மை விளைவிக்கும் என்று நான் கருதினேன். இப்போதும் கருதுகிறேன். இத்தகைய பிரதிநிதி இல்லாவிட்டால், தமிழரின் நலன்களுக்கு ஈடுசெய்ய முடியாத சேதம் ஏற்படுத்தப் படலாம்" என்று மார்ட்டின் எழுதியிருப்பதைப் படிக்கும் போது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. மார்ட்டின் இப்படி எழுதியிருப்பதன் அர்த்தம் என்ன?

தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறி விட்டால், அங்கே எஞ்சியிருக்கும் மற்றைய தமிழ் எம். பிக்களினல் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை மனப்பூர்வமாக வலியுறுத்த முடியாது என்பது தானே!

மார்ட்டின் நீதிபதியாக இருந்தவர். சிறந்த கல்விமான், மெத்தப்படித்தவர். கறுவாக் காட்டுப் பகுதியில் வாழ்ந்து அங்குள்ள பல பெரிய மனிதர்களுடன் நன்கு நெருங்கிப்பழகியவர்.

மெத்தப் படித்தவர்கள் எப்போதுமே விஷயங்களைச் சொல்லும்போது மிகவும் நாசூக்காகத்தான் சொல்லுவார்கள்.

தனது கடிதம் ஒன்றில், செல்வநாயகத்தை ஒரு சிறந்த ஜனநாயகவாதியாக மறைமுகமாகப் படம் பிடித்துக் காட்டிய மார்ட்டின், இன்னெரு கடிதத்தில் தமிழரசுக் கட்சியைச் சேராத, மற்றைய எம். பிக்களின் கையாலாகாத்தனத்தையும், தமிழர் நலன் கருதி மனப்பூர்வமாக அவர்கள் செயல்படாத தன்மையையும் மறைமுகமாகச் சுட்டிக் காட்டியிருக்கிருர்!

மெத்தப்படித்த மார்ட்டினுக்கு உள்ள இந்தச் சாதுரியம் வேறு யாருக்கு வரும்!

—வெள்ளி ஆகஸ்ட் இதழ்
(ஆசிரியத் தலையங்கம்)

# 8ம் நூற்ருண்டில் கடவுள் கட்டளையிட்டதை 20ம் நூற்ருண்டில் கருணுநிதி நிறைவேற்றுகிருர்!

## சுந்தரர் விழாவில் ஈழவேந்தன் பேச்சு!

சென்ற 30-7-71ல் குருநாகல் சைவமகா சபையில் மாலை 6-30 வரையில் டாக்டர் ஆ. சுப்பிரமணியம் தலைமையில் "நம்பியாரூரன் நாம் வணங்கும் தன்மையான்" என்ற தலைப்பில் சுந்தரர் குருபூசையன்று சுந்தரர்பற்றி சிறப்புரை நிகழ்த்திய ஈழவேந்தன் அவர்கள், "அருச்சனைபாட்டேயாகும், ஆதலால் நம்மை மண்மேல் சொற்தமிழ் பாடுக" என்று 8ம் நூற்ருண்டில் ஆரூரனைப் பார்த்து ஆண்டவன் இட்ட கட்டளையை "தமிழ்நாட்டுக் கோவில்கள் அனைத்திலும் ஆகஸ்ட் 15 தொடங்கி தமிழில் அர்ச்சனை நடைபெறவேண்டும் என்று தமிழக முதல்வர் கருணுநிதி அவர்கள் இட்ட கட்டளையால் இனிது நிறைவேறுவது கண்டு யாம் இறும்பூது எய்துகிருேம்" என்று கூறியபோது அவையில் இருந்தோர் பெருங்கையொலி எழுப்பி வரவேற்றனர்.

### தமிழ் இசைக்கு புத்துயிர் அளித்த தம்பிரான்தோழர்

திரு: ஈழவேந்தன் அவர்கள் தன் நீண்ட ஆய்வுரையில் மேலும் கூறுகையில் 7ம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ள சுந்தரர் பாடல்கள் 1026 பாடல்களை உண்டாக்கி 100 பதிகங்களாகவிளங்குகின்றன. இவருடைய பாடல்களை இந்தளம் முதல் பஞ்சமம் ஈருக 17 பண்களாக இடைக்காலத்து அறிஞர் வகுத்துள்ளனர். ஞானசம்பந்தருக்கு அடுத்த நிலையில் அழிந்தொழியும் நிலையில் இருந்த தமிழ் இசைக்கு புத்துயிரும் புதுவாழ்வும் அளித்த பெருமை நாம் வணங்கும் நம்பியாரூரரையே சாரும் என்ருர்.

ஞானசம்பந்தர் பாடல்கள் திருக்கடைக்காப்பு என்று அழைக்கப்பட நாவுக்கரசர் பாடல்கள் "தேவாரம்" என்றும் சுந்தரர் பாடல்கள் "திருப்பாட்டு" என்றும் அழைக்கப்படுகிறது என்று மேலும் கூறினர்.

அழகு தமிழில், அடுக்குமொழியில் ஆண்டவனை அத்தா! ஆயா! அள்ளே! அடிகேள்! ஆதி! அண்ணு, ஆனுய் ஆற்ருய்! அழகா! என்று அழைத்து ஒத்த உரிமையுடன் ஆண்டவனுடன் தோழமை நெறியில் பழகிய ஆரூரர் ஆண்டவனின் அடியார்களின் பெருமையைக் கூறுகையில் "அப்பாலும் அடிசார்ந்த அடியவர்க்கு அடியவன்" என்று தன்னை மிகவும் தாழ்த்திக் கூறி தன்னடக்கத்தின் திருவுருவமாக விளங்குகிருர். ஈழவேந்தன் அவர்கள் மேலும் கூறுகையில் இவ்விதம் ஆன்மீக அடியவர்களின் அடியவராய் விளங்க விரும்பிய தம்பிரான் தோழர் அவர்கள் எம்மவருட்சிலர்போல் எம்மை அழித்தொழித்து ஆளநினைக்கும் அரசியற் தலைவர்களுக்கு ஆமாக்கூறி அவர்தம் அடிவருடிகளாக வாழ என்றும் விரும்பியதில்லை. "பொய்மையாளரை"ப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின்! புலவீர்காள்! என்றும் வஞ்சநெஞ்சனை, மாசழக்கனை பாவியை, வழக்கு இல்லியைப் பஞ்ச துட்டனைச் சாதுவே என்று பாடினும் கொடுப்பார் இலை" என்று புலவர்க்கு அன்று அவர் கூறிய அறிவுரை இன்று ஆளுங்கட்சியினரை அவர்தம் அடிவருடிகளை தூக்கி வைத்து துதிபாடுவோர்க்கு கூறப்படும் மிகத்தேவையான அறிவுரையாக விளங்கு

(10ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் ஆனந்தசங்கரி திருவிளையாடல்!

கிளிநொச்சித் தொகுதியில் மக்கள் சேவையில் தீவிர அக்கறை காட்டி அதன் பயனுக கிளிநொச்சி மக்களின் அபிமானத்தை பெற்றிருந்த அரசாங்க ஊழியர்கள் பலர் திடீர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டு வருகிருர்கள். இந்தக் கைங்கரியத்துக்கு மூலகாரணமாக இருந்து வருபவர் கிளிநொச்சி பா. உ. ஆனந்தசங்கரி யென்பதறிந்து மக்கள் குமுறுகின்றனர்.


திரு. ஆனந்தசங்கரி, அரசியல் ரீதியிலும், தனிப்பட்ட முறையிலும், தனக்குப்பிடிக்காத அரசாங்க அதிகாரிகளை பழிவாங்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக பரவலாக தொகுதி முழுவதும் பேசப்படுகிறது. கடந்த தேர்தல் காலத்தில் தமக்கு எதிராக இருந்தவர்களையெல்லாம் இடமாற்றம் செய்யும் வேலையில் ஆனந்தசங்கரி ஈடுபட்டிருக்கிருராம். அமைச்சர்களின் கால் கைகளைப் பிடித்து, இந்தப் 'பழி' வாங்கும் வேலையை ஆனந்தசங்கரி கச்சிதமாகச் செய்து வருகிருர் என்று சொல்லப் படுகிறது.

திரு. ஆனந்தசங்கரியின் 'பழிவாங்கல்' நடவடிக்கைக்கு அண்மையில் ஆளானவர்களில் ஒருவர் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் [illegible] அதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் ஞானசேகரமும், டாக்டர் செல்வி. நடராசாவும் என்று தெரிகிறது; இவர்கள் இருவருக்கும் 24. 6. 71 இடமாற்றல் உத்தரவு திடீரென்று அறிவிக்கப்பட்டு 1. 7. 71முதல் சிங்களப்பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

ஆனந்தசங்கரியின் திருவிளையாடல் கண்டு தொகுதி மக்கள் கொதிக்கிருர்கள். ஊருக்காக உண்மையுடன் உழைப்பவர்களை இடமாற்றம் செய்விப்பதற்குத்தான, ஆனந்த சங்கரியை பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைத்தோம் என்று அவர்கள் ஆத்திரத்துடன் கேட்க ஆரம்பித்திருக்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் (9)



# தீக்குள் விரலை வைத்தால்...!

**யாழ். ஜனார்த்தனன்**

எதிர்பார்த்து வரும் இன்பமோ துன்பமோ மனித இதயத்தை அதிகம் பாதிப்பதில்லை. ஆனால் எதிர்பாராது வரும் இன்பமும்சரி துன்பமும் சரி மனிதனை நிலைதடுமாற வைத்துவிடும். அப்படித்தானிருந்தது பானுமதியின் நிலையும். அந்த வேளையில் அந்த அறையில் தன்னைக் காப்பாற்ற மனிதர்களால் முடியாது என்றே தீர்மானித்து விட்டாள். ஆனாலும் அவள் வழிபட்ட தெய்வம், அவளை அப்படி ஒரு அவலச் சூழ் நிலையில் காப்பாற்றாமல் போய்விடுமோ என்ற ஏக்கமும் அவள் மனதை அரித்தது. கணப்பொழுதான். தன்னால் இயன்ற வரையில் அவனுடன் போராடுவது என்று முடிவு செய்துகொண்டாள்.

'நீங்கள் யார்? என்னை ஏன் இப்படிப் பயமுறுத்துகிறீர்கள்? நான் ஒரு ஏழை. பரிமளா எங்கே?'

'பரிமளாவா அவளையாருக்கடி தெரியும். எனக்கு வேண்டியது நீதான்.'

'நான் ஒரு பாபமும் செய்தறியேனே.'

'நீ பெண்ணாய்ப் பிறந்தது—அதுவும் ஏழை வீட்டுப் பெண்ணாய் அழகோடு பிறந்தது? ஆணவமும் திமிரும் பிடித்தலைவதுதான் பாபம்.' என்றான் அந்த வெறி கொண்ட மனித மிருகம்.

அவன் கண்களில் மோக வெறி தாண்டவமாடியது. கருணையே இல்லாத கண்கள். அவன் பிணந்தின்னும் கழுகு போல் நின்றிருந்தான்.

'ஐயா! என்னை உங்கள் பிள்ளை போல் நினைத்து விட்டு விடுங்கள். நான் பணக்காரியல்ல. என் சொத்து சுதந்திரம் அத்தனையும் என் மானம்தான். என்னைக் கெடுத்துவிடாதீர்கள்.' என்று மன்றாடினாள்.

'நீ ஏழைதானே? உனக்குத் தேவையான பணம் தருகிறேன். என் விருந்துக்கு உரிய உன்னை இழக்க மட்டும் என்னால் முடியாது.' என்று கூறி அவள் கரங்களைப் பிடிக்கப் பாய்ந்தான்.

அவள் திடீரென நகர்ந்து நடுவே உள்ள சதுர மேசையின் ஒரு ஓரத்தில் நின்றுகொண்டாள். முடிந்த மட்டும் அந்த மேசையைச் சுற்றி ஓட முடிவு செய்தாள்.

'என்னை ஏமாற்ற முடியாது பானு!'

'ஐயோ! என்னைத் தொந்தரவு செய்தால் பொலிசில் முறையிடுவேன்.'

'பொலிசா? அடி பைத்தியமே! உன்னை நான் அழைத்தேனா? யாரோ அழைத்து நீ வந்தாய். என் அறையைத் தேடி நீயாகவந்தாய் விருப்பமில்லாமலா வந்தாய் என்று நான் கேட்பேன்.'

'சதி... சூழ்ச்சி...' என்று கதறினாள் பானு.

'எப்படி வேண்டுமானாலும் கதறு. கூக்குரலிடு. யாருமே இங்கு வரமாட்டார்கள். இங்கிருந்தவர்களைக் கூட அனுப்பிவிட்டேன்.'

'கடவுளே! இந்த வெறியனின் துள்ளலைப் பார்த்துக்கொண்டா இருக்கிறாய்?' என்று கதறினாள் பானுமதி.

'கடவுள் உனக்கு உதவமாட்டார். நீ கதறித் துடித்தாலும் உன்னை நான் விடப் போவதில்லை.' என்று அவன் கூறி முடிக்கும் போது, வெளிக் கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அவன் பரபரப்படைந்தான். பின்னர் அவளைத் திரும்பிப் பார்த்து, 'நீ ஏதும் முரண் செய்தாய் என்றால் உன் மானத்தையே அவர்கள் முன்னிலையில் பறக்கடித்து விடுவேன்.' என்று கூறிவிட்டுக் கதவைத் திறந்தான்.

'குட்மோனிங், மிஸ்டர் நாகலிங்கம், நான் 'அப்துல்லா அன் கோ' விலிருந்து வருகிறேன்.' என்றான் வந்தவன்.

'ஓ!... நம்ம கம்பனி ஆளா உள்ளே வாரும். இங்கே ஒரு விருந்துக்குத் தயார் செய்து கொண்டிருக்கேன்.' என்று கூறிவிட்டு உள்ளே சென்றவரைப் பின் தொடர்ந்தான் ரகுராமன்.

அவனைப் பார்த்ததும் பானுமதியின் உள்ளத்தைப் பிடித்திருந்த அச்சம் விலகிவிட்டதாயினும், அவனும் இவனுக்கு உடந்தையாயிருப்பானோ என்ற அச்சமும் தலைதூக்கியது. ஆனால் ரகு அவளைத் திரும்பிப் பார்க்காமலேயே ஒரு நாற்காலியில் அமர்ந்தான்.

'மிஸ்டர் நாகலிங்கம், இந்தக் கவரில் சகல விவரமும் இருக்கின்றது. பார்த்துவிட்டு ரசீதில் கையொப்பமிட்டுத் தரவும்.' என்றான்.

'உங்கள் பெயர் ரகுராமனா?'

'ஆமாம்.'

'கம்பனியில் சேர்ந்து...'

'மூன்று மாதங்கள் தானாகின்றது.'

'அப்துல்லாவுக்கு மிகவும் வேண்டியவர் போலும்.'

'மிஸ்டர் நாகலிங்கம், பார்சல் செக்பண்ண வேண்டாமோ?'

'வேண்டியதில்லை.' என்று கூறிவிட்டு, ரசீது எழுத ஆரம்பித்தார்.

'இந்தப் பெண் உங்கள் செக்கிறட்டரியா?'

'இல்லையில்லை. இவள் ஒரு விடயமாக வந்திருக்கின்றாள்,'

'இங்கே அடிக்கடி வருவாளா?'

'என் வாடிக்கையாளர்களில் இவளும் ஒருத்திதான். மிஸ்டர் ரகு, வேண்டுமானால் உங்களுக்கும்...'

'நோ, நோ, அப்படி எனக்குப் பழக்கமில்லை மிஸ்டர் நாகலிங்கம்.' என்று அவன் கூறிய பொழுது பானுமதிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

'ரசீது எழுதி முடிந்ததா?'

'ஜேஸ், ஜேஸ். இதோ.' என்று அவனிடம் ரசீதை கொடுத்ததும் அவன் எழுந்து நின்றான். அதே வேளையில், பானுமதி ஓடி வந்து அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

'மிஸ்டர் நாகலிங்கம்! என்ன இது?' என்றான் ரகு.

'அவள் ஒரு அரைப் பயித்தியம். பணத்துக்காக என்னவோ எல்லாம் செய்வாள்.' என்றான் நாகலிங்கம்.

'ஓ! அப்படியா?' என்று தன் தலையை வருடினான் ரகு.' கதறினாள் பானுமதி.

'அப்படியானால் இதுவரை நீ எதுவும் பேசாமல் நின்றதேன்?'

'ரகு! உங்களைக் கண்டதும் எனக்கு நேரவிருந்த விபத்திலிருந்து காப்பாற்ற ஆண்டவனே வந்து விட்டதாக எண்ணி மகிழ்ந்திருந்தேன். ரகு! என்னைக் காப்பாற்றுங்கள் ரகு.'

'மிஸ்டர் நாகலிங்கம்! வட் இஸ் திஸ்?' என்றான்.

'மிஸ்டர் ரகு! இது ஒரு பைத்தியம் என்றேனே. இவள் கூறுவதை நம்புகின்றீர்களா?' என்றான் நாகலிங்கம்.

'எப்படி நம்புவது? இந்தப் பெண்களே சுத்த மோசம். இப்படித்தான் மிஸ்டர் நாகலிங்கம், என் வீட்டிலுள்ள ஒரு பெண்.' என்று ஆரம்பித்துக் கீதாவின் கதையைக் கூறிமுடித்து விட்டு, 'அப்படித்தான் இவளும் இருப்பாளென்று நினைக்கிறேன். இல்லையா மிஸ்டர் நாகலிங்கம்?' என்றான் ரகுராமன்.

'யூ ஆர் கரெக்ட் மிஸ்டர் ரகு. பணத்துக்காக வந்து காலைப் பிடித்துக் கெஞ்சுவது ஆட்களைக் கண்டதும் பத்தினிவேடம்' என்று முறுகினான் நாகலிங்கம்.

'மிஸ்டர் நாகலிங்கம்! இவள் போக விரும்பினால் போகலாம் தானே? என்னையேன்... உன்னை அவர் பலவந்தம் செய்கிறார் என்று தானே கூறினாய்?'

'ரகு! என்னை நீங்கள் நம்பவில்லையா?'

'மிஸ், நம்பிக்கை என்பது சந்தர்ப்ப சூழலைப் பொறுத்து உருவாவதுதானே. இந்த இடத்தில் மிஸ்டர் நாகலிங்கம் கூறுவதுதான் உண்மை. அவர் வலியவர், பணக்காரர். என்ன மிஸ்டர் நாகலிங்கம்?'

'மிஸ்டர் ரகு!'

'அது சரி மிஸ்டர் நாகலிங்கம். என்னை ஏமாற்றிய அந்தப் பெண்ணின் பெயர் உங்களுக்குத் தெரியாதே?'

'சொன்னால் தெரிந்து கொள்கிறேன்.'

'அவள் பெயர் கீதா?'

'கீதாவா? எந்தக் கீதா?' ஆச்சரியப்பட்டார் நாகலிங்கம்.

'கீதா லட்சுமணன் உங்களுக்குத் தெரியும் போலிருக்கே, மிஸ்டர் நாகலிங்கம்! இந்தப் பெண்ணை வெளியே போக விட மாட்டீர்களா?'

'அவள் வந்து எனக்கு ஒரு வராசல் பரிசாக ஒப்படைக்கப்பட்டவள்.' என்றார் நாகலிங்கம்.

'அப்படியானால் நீங்கள் இதுவரை கூறியது யாவும் பொய் இல்லையா?,

'டேய் ரகு! நீ வந்த வேலை முடிந்து விட்டது, போ வெளியே இது என் சொந்த விடயம்' என்று கர்ஜித்தான் நாகலிங்கம்.

'ஊரார் வீட்டுப் பெண்ணை ஏமாற்றி உன் வீட்டில் கொண்டு வந்து வைத்து மிரட்டுவது, பலாத்காரம் செய்ய முற்படுவது உன் சொந்த விடயமா?' அவனுடைய பேச்சில் இதுவரையிருந்த கேலிகள் மறைந்து, சற்றுச் சூடேறுவதை உணர்ந்தாள் பானு...

'டேய் தம்பி! நீ சிறுபிள்ளை. விளையாடாதே.'

'மிஸ்டர் நாகலிங்கம்! என் கம்பனி விடயம் முடிந்து விட்டது இல்லையா?'

'ஆமாம், நீ போ இல்லை அப்துல்லாவிடம் கூறி உன் சீட்டைக் கிழித்து விடுவேன்.'

'என் சீட்டுக் கிழியுமுன் உன் சீட்டுக் கிழிக்கப்பட்டு விடும் நாகலிங்கம். நீ யாரோ ஒரு மூன்றாம் மனிதர் முன்னிலையில் எமது பிஸ்னஸ் விடயம் பற்றிக் கதைத்தவைகள் அப்துல்லாவுக்குத் தெரிந்தால்...? அது மட்டுமில்லை நாகலிங்கம் இந்தப் பெண் நேரே பொலிசுக்குப் போவாள். பொலிசிற்குப் போவதை அப்துல்லா விரும்பமாட்டார் என்று நினைக்கின்றேன்.'

'மிரட்டுகிறாயா தம்பி? நான் நாக பாம்பு, உன் பாச்சா பலிக்காது. நீ கூறுவதற்கெல்லாம் சாட்சிகள் வேண்டாமா?' என்று ஏளனமாகச் சிரித்தார் நாகலிங்கம்.

'அட நச்சுப்பாம்பே!' என்று அதிர்ச்சியடைந்தவன் போல் நடித்தான் ரகு.

நாகலிங்கம் பலமாகச் சிரித்தார். பானுவின் உடலும் உள்ளமும் சேர்ந்து நடுங்கியது.

(11ம் பக்கம் பார்க்க)

## நெரிசல் நேரிழை

ஒதுங்குதல் என்றோர் அழகு
தமிழ்ப்பெண் இடத்தே உளது!
வேலி ஓரம்
பதுங்கியே காதல் இளைஞன்
தெருவால் நகர்தல் பார்ப்பாள்!
ஓடிப் பாய்ந்து
பிதுங்கு கண் காமம் பெருகிச்
சிவப்பத் தலைவன் மேனி
பிடித்திழுக்கும்
மதங்கொள் மேல் நாட்டு மகளிர்
வெறிப்பண் பிலாத வாழ்வு
தமிழ்ப்பெண் மாண்பே!

திருவிழாக் கோயில் இடத்தே
அடயான் நேற்றோர் சிறுக்கி
போனாள் கண்டேன்...
வருபவர் போவோர் உடல்கள்
படத்தன் வளையும் மேனி
இடித்திடித்து
சுருளிதழ் இடையோர் காம
முறுவல் சுழற்றிப் போனாள்...
தோகை மேனி
இருபது நூறு முறைகள்
இடிகள் தாங்கக் கண்டேன்...
இதுவும் பண்போ?

அடி தமிழ்ப் பெண்ணே! நீயோ
தமிழ்ப்பெண்! நிலத்தைக் காலால்
அழித்துக் கீறி
வடிவெழில் நாணம் இயற்றும்
அழகி! கூட்டத்திடையே
உடல் வருந்த
இடிபடுதலும் ஓர் சுவையோ?
இன்பமோடி? இளைஞர்
திருவிழாவில்
துடியிடை கிள்ளிச் செல்ல...
சுவாமியே ... இவள் பார்
சுவைக்கின்றாளே!

உராய்கிறாள் தேவி! இளைஞன்
ஒருவன் திரள் கூட்டத்தே
தடி ஒன்றேந்தி
விரோதமாய் இல்லை ... விரும்பி
அடிக்கின்றனன் விகாரை
மார்பில் ... ஐயோ!
புராதனத் தமிழர் மானம்
திருவிழாவில் விழுந்து
போதல் கண்டீர் ...
அரோகரா! இவள் ஆடையுமோர்
அழகே! அனைவருக்கும்
வெளிச்சம் அம்மா!

அத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் சிவன்கோவிலில் காவடிப் படம்;

# தினபதியில் வெளிவந்த மறுப்பு அறிக்கையும் அதன் பின்னணியில் நிகழ்ந்த சம்பவங்களும்

காரைநகர் சிவன் கோவிலில் இடம் பெற்றிருந்த தியாகராசாவின் காவடிப் படம் உடைத்து நொருக்கப்பட்டதாக 30-7-71 சுதந்திரனில் நாம் வெளியிட்டிருந்த செய்தியை மறுத்தும், அச்செய்தியுடன் நம் தலைவர் செல்வாவை சம்பந்தப்படுத்தியும் கே. கே. சுப்பிரமணியம் என்பவரும் தினபதியாரும் சேர்ந்து கீழ்த்தரமான அறிக்கையொன்றை 6-8-71 தினபதியில் விடுத்துள்ளனர்.

கிறிஸ்தவரான திரு. செல்வநாயகம், சைவர்களின் பெருமைமிக்க ஸ்தலங்களில் ஒன்றான ஈழத்துச் சிதம்பரத்தை அரசியற்களமாக்க முனைவதாககூறி மொட்டத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டிருக்கின்றனர் சுப்பிரமணியமும் தினபதியாரும்!

திரு. செல்வநாயகம், ஒரு கிறிஸ்தவர் என்பது ஈழத்து மக்கள் அனைவருக்குமே தெரிந்த விடயம்: தந்தை அவர்கள் ஒரு கிறிஸ்தவர் என்பதை நன்கு தெரிந்துகொண்டுதான் ஈழத்துத் தமிழ் மக்கள் — பெரும்பான்மை இந்துக்கள் — அவரைத் தமது அரசியல் தலைவராக — ஒரே வழிகாட்டியாக — ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். 1970 தேர்தலின்போது தினபதியாரும் சுந்தரலிங்கமும் சேர்ந்து, சிலுவையா வேலா என்ற கூக்குரலுடன் ஈனத்தனமாக இந்துக்களிடையே மதவெறியை தட்டிவிட்டு, செல்வாவுக்கு எதிராக கச்சை கட்டிக்கொண்டு புறப்பட்டும், அத்துரோகப் பிரசாரத்தில் இந்துமக்கள் கொஞ்சமும் மயங்கிவிடாது தந்தை செல்வாவுக்கு பெருவெற்றியீட்டிக்கொடுத்ததை நாடறியும்.

இப்பொழுதும் அதே வேலையை செய்ய முயன்றுள்ளது இந்த நாதியற்ற கூட்டம்; சுதந்திரனில், சுதந்திரன் ஆசிரியர் வெளியிட்டிருந்த ஒரு செய்தியுடன் அநாவசியமாக தந்தை செல்வாவைப்புகுத்தி தேவையற்ற இந்து—கிறிஸ்தவ மதப்பிரச்சினையை உண்டாக்கப்பார்த்திருக்கிறது இத்துரோகக்கூட்டம்.

காரைநகர் சிவன்கோவிலில் தியாகராசாவின் காவடிப்படம் உடைக்கப்பட்ட செய்தியை சுதந்திரனில் வெளியிட்ட சைவ மதத்தவரான சுதந்திரன் ஆசிரியருடன் மோதுவதற்கு திராணியற்று, இச்செய்தியோடு சிறிதும் தொடர்பற்ற தமிழரசுத்தந்தையை தூற்றுவதுதான் தினபதிக்கூட்டத்தின் பண்பாடுபோலும்!

ஈழத்து சிதம்பரத்தை அரசியல் களம் ஆக்கியது சுதந்திரனல்ல—அந்தப்புனித ஸ்தலத்தில் ஓர் ஐந்தாந்தர அரசியல் வாதியின் புகைப்படத்தை வைத்தவர்களே என்பதை சைவமக்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

6-8-71 தினபதியில் வெளிவந்த குறித்த செய்தியின் பின்னணியில் நடைபெற்ற சில சம்பவங்களை சுதந்திரன் வாசகர்கள் அறிந்துகொள்ள வேண்டியது முக்கியமானதாகும்.

5-8-71 காலை 8மணிக்கு கே. கே. சுப்பிரமணியம் என்பவர் சுதந்திரன் அலுவலகத்தில் வந்து என்னைச் சந்தித்தார்; தான் தமிழரசுக்கட்சியின் நீண்டகால ஆதரவாளன் என்றும், தமிழரசுத்தந்தைக்கு தன்னை நன்கு தெரியுமென்றும், சுதந்திரனில் வெளியிடப்பட்டிருந்த தியாகராசாவின் படம் உடைக்கப்பட்ட செய்தியை சுதந்திரனுக்கு கொடுத்ததாக தன் மீது ஊரில் பழி சுமத்தப்படுவதாகவும், ஆகவே தமக்காகவாவது அச்செய்திக்கு சுதந்திரனில் மறுப்பு வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தியாகராசாவின் அரசியல் போக்கை தாம் எதிர்ப்பதாகவும், அ. நி; சபையிலிருந்து தியாகராசா வெளியேற வேண்டுமென காரைநகர் மக்கள் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையை உருவாக்குவதில் தாமும் ஈடுபட்டதாகவும், ஆனால் காவடிப் படம் உடைக்கப்பட்ட சம்பவம் கோவிலோடு சம்பந்தப்பட்டிருப்பதால் கோவிலுக்கு களங்கம் வராமல் ஏதாவது செய்யவேண்டுமென மேலும் அவர் தெரிவித்தார்;

ஈழத்துச்சிதம்பரத்தை அரசியல் களமாக்கியவர்கள், அங்கு ஓர் அரசியல் வாதியின் படத்தை வைத்தவர்களே என்றும், சுதந்திரன் செய்தியால் கோவிலுக்கு எவ்வித களங்கமும் ஏற்பட்டுள்ளதாக கருதவேண்டியதில்லையென்றும் நான் அவரிடம் கூறினேன். அத்துடன், முறைப்படி கோவில் நிர்வாகிகள் சுதந்திரனுக்கு நேரடியாக மறுப்பு அனுப்பினால் அது கவனிக்கப்படுமென்றும் கூறினேன்.

கோவில் தர்மகர்த்தாக்கள் தமக்கு இதுபற்றி எழுதியிருப்பதாககூறி ஓர் கடிதத்தை கே. கே. சுப்பிரமணியம் என்னிடம் காட்டினார். அக்கடிதத்தில் தினசரிப்பத்திரிகை ஆசிரியர்களைப்பிடித்து சுதந்திரன் செய்தியை மறுக்கும்படியும் இதற்கு எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லையென்றும் எழுதப்பட்டிருந்தது.

இச்சம்பவம் நடந்த மறுநாள் தினபதியில் மட்டும் பெரியவர் செல்வாவையும் இழுத்து சுதந்திரன் செய்திக்கு மறுப்பு வெளிவந்திருந்தது; என்ன நடந்திருக்கும் என்பதை வாசகர்களே ஊகித்துக்கொள்வார்களாக.

—ஆசிரியர்

## சுதந்திரன்

சந்தா விபரம்

1 வருடம் 18 ரூபா
6 மாதம் 9 ,,

நிர்வாகி,
சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு—12.

## தீக்குள் விரலை...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

'தம்பி ரகு, நீ உன் வழி போவதுதான நல்லது. அப்துல்லா தன் காரியத்தைத் தவிர வேறு வேலையில் தனது ஊழியர்கள் தலையிடுவதை விரும்பமாட்டார்; அது உனக்குத் தெரியுமில்லையா?'

'நாகலிங்கம்! நீ நச்சுப் பாப்பு. நான் யார் தெரிமா? உன்னைப் போன்ற நச்சுப் பிராணிகளையே சுட்டுப் பொசுக்கும் தீ, காட்டுத் தீ. இதோ! இதுவரை நீ பேசிய விடயங்கள் இந்த ஒலிப்பதிவு நாடாவில் பதிவாகியிருக்கும்.' என்று பக்கட்டிலிருந்து எடுத்துக் காட்டினான்; அது ஒரு நவீன ஒலிப்பதிவுக் கருவி.

'ரகு! நீ... நீ...'

'உன்னைப் போல ஆயிரம் ஆயிரம் எத்தர்களை எனக்குத் தெரியும். நீ முதலில் அப்துல்லா முன் நிறுத்தப்படுவாய். உன் பங்கு வியாபாரம் குளோஸ். பின்னர் பொலிசில்... புரிகின்றதா?' என்று சிரித்தான் ரகு.

'தம்பி! என்னை மன்னித்து விடு. அந்த; வேலைமட்டும் செய்யாதே. நீ இவளைக் கூட்டிப்போ. இனி நான் இதிலெல்லாம் தலையிடமாட்டேன்.' என்று மன்றாடினான்.

'ஆல்ரைட் பானு, நீ கதவைத் திற.' என்றான்.

'தம்பி! அந்த நாடாவைத் தருகின்றாயா?'

'இதையா? இதற்குப் பெறுமதியாக நீ என்ன தருவாய் மிஸ்டர் நாகலிங்கம்? இந்தப் பெண்ணின் மானமே இதில்தான் அடங்கியுள்ளது.'

'தம்பி ரகு!'

'சரி இதற்கு மான நட்டமாக ரூபாய் பத்தாயிரம் அந்தப் பெண்ணிடம் கொடுத்து விடுகிறாயா?'

'ரூபா பத்தாயிரமா?'

'ஆமாம் இதே பணத்தை உன்னை ஏவி விட்டவளிடமே கறக்கலாம்.'

'உனக்கு அதெல்லாம் தெரியுமா?'

'தெரியுமாவா? அவள் தானே இதெல்லாம் கூறினாள்.'

'சண்டாளி கீதா, உன்னை நான் சும்மா விடப் போவதில்லை' என்று கூறிவிட்டு, மேசை டிராயரைத் திறந்து ரூபா பத்தாயிரம் எடுத்து மேசை மீது வைத்தார்.

'சரி மிஸ்டர் இதில் கையொப்பமிடுங்கள்' என்று கூறிவிட்டு, ஒரு துண்டுக் கடிதத்தை நீட்டினான்.

அந்த துண்டுக் கடிதத்தைப் படித்துப் பார்த்ததும் திகைத்தவராய் நிமிர்ந்து அவனைப் பார்த்தார்.

'உங்களுக்கு விருப்பம் என்றால் மட்டுமே தான், ஸ்டாம்பு ஒட்டி சைன் பண்ணுங்கள். இல்லையெனில் பணத்தை எடுங்கள். நான் வருகிறேன்.' என்று கூறிவிட்டு எழுந்தான்.

அதே வேளையில் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்ற ரகு பானு, திரும்ப உள்ளே ஓடி வந்து 'ரகு, ரகு' என்று வெளியே சுட்டிக் காட்டினாள். அவள் உள்ளம் வேகமாக அடித்துக் கொண்டது.




## 'அநீதி இழைக்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நாட்டிலே என்ன நடக்கின்றது? நான் முன்னர் கூறியதுபோல, நீங்கள் இந்தப் பிரச்சினையை அரசியற் சூதாட்டமாக்குகின்றீர்கள். காலஞ்சென்ற பண்டாரநாயக்க அவர்கள் 1944 ஆம் ஆண்டிலே இந்நாட்டில் இரண்டு மொழிகளும் உத்தியோக மொழிகளாக இருக்க வேண்டுமென்று பேசினார். பின்னர் 1956ம் ஆண்டிலே அவர் தம்முடைய கருத்தை மாற்றிக்கொண்டதாகக் கூறினார். அதன் பின்னர் இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் 1964ம் ஆண்டு வரையும் தமிழ்மொழிக்கு இந்நாட்டிலே போதிய உரிமை கொடுக்கவேண்டுமென்று வாதாடினார்கள்; அதற்காக உண்மையில் பல இன்னல்களைக்கூட அனுபவித்தார்கள். ஆனால், பின்னர் அவர்களும தங்கள் மொழிக் கொள்கையை மாற்றிவிட்டதாகக் கூறுகிறார்கள்.

1956ம் ஆண்டிலே பண்டாரநாயக்க மாற்றிவிட்டதாகக் கூறுகிறார்கள்.

1956ம் ஆண்டிலே பண்டாரநாயக்க மாற்றினார்; 1964ம் ஆண்டிலே மதிப்புக்குரிய எங்கள் இடதுசாரித் தலைவர்கள் மாற்றிக் கொண்டார்கள். இப்பொழுது, இலங்கை முழுவதும் தமிழுக்குச் சம அந்தஸ்துக்கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை தமிழ்க் காங்கிரசும் மாற்றிவிட்டது.

எனவே, எஞ்சியிருக்கின்ற தமிழரசுக் கட்சியும் தங்கள் கொள்கை மாற்றிக்கொள்ளும் என்று நீங்கள் நினைப்பது இயல்புதான்; ஆனால், தமிழரசுக் கட்சிதனது கொள்கையை என்றும் மாற்றப் போவதில்லை. ஏனென்றால்; தமிழரசுக்கட்சி ஒருவிடுதலை இயக்கமாக தமிழ் மக்களுடைய உரிமைகளைப்பெற இருக்கும்ஒருகட்சியாகஇருக்கின்றபடியால் அந்த உரிமையைபெறும்வரைக்கும் அது அகிம்சா முறையிற் போராடிக்கொண்டுதான் வரும்; அவ்விதமே அது போராடிக்கொண்டு வந்திருக்கின்றது.

எனவே, எங்கள் கொள்கையை அறிந்து, எங்கள் உள்ளங்களில் உள்ள அச்சத்தை அறிந்து எங்கள் வேண்டுகோள்களைப் பொருட்படுத்தி, நீங்கள் ஓர் உடன்படிக்கைக்கு வராவிட்டால், இதுகால வரையும் எங்களை அழைத்துப் பேசியதைப் போல அழைத்துப் பேசி, மொழி உரிமையைத் தர நீங்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்நாட்டிலே அமைதி ஏற்படாது. அத்துடன் இந்தச் சபையிலிருந்து நாங்கள் ஒத்துழைக்கவும் முடியாது.

காந்தி அடிகள் கூறியதைப் போல, ஒத்துழைப்பதைப் போல ஒத்துழையாமையும் ஒருவருடைய கடமை. தான் அழிக்கப்படுகின்ற பொழுது. அல்லது தனது இனம் அடிமையாக்கப்படுகின்ற பொழுது ஒவ்வொரு மனிதனும் ஒத்துழையாமையைத் தனது கடமையாகக்கொள்ள வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்கள். அந்தப் பெருந்தொண்டர் கூறிய அந்த வழிதான் எங்கள் முன் இருக்கின்றது.

## மாட்டின்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வளவுகாலம் ஏமாற்றிக் கொண்டிருந்த வருணன் அன்றுதான் கருணை காட்டி இருந்தான். பொழுது கருகுவதற்குள் உழுது முடித்துவிட வேண்டுமென எண்ணிக் கொண்டிருந்த உழவனுக்கு மாடுகளின் போர் கோபமூட்டியது.

ஒரு காலத்திற் பூத்துக் குலுங்கிப் பசுமை காட்டிய நிலம் சில காலமாகப் பாலை போலப் பாழ்பட்டுக்கிடந்தது. என்றோ ஒரு நாள் மழை வரும். மீண்டும் நிலமகளின் பருவ எழில் நிறைந்து விளங்கச் செய்யலாம். நெல்லும் பிறவும் ஒன்று நூறாகக்குவிக்கலாம். எனக் கனவு கண்டு கொண்டிருந்தான் உழவன். மழைபெய்ததால் உள்ளமும் உடலும் சுறுசுறுப்பு அமைந்துள்ளன. இந்த நேரத்தில் மாடு குழப்புவதா... செங்காரியை வாங்கும் போதே ... மனிலே நந்தை அறுக்குமென பலர் சொன்னார்கள். எப்படியாவது அதனைத்திருத்தி எடுத்துவிடலாம் என அவன் நம்பினான். போனமுறை சேறுழவின்போது கூட அது சிறிது குழப்பம் செய்தது. ஆனாலும் உழவன் அதைக் கட்டி ஆண்டு விட்டான்.

விழுந்து கிடந்த செங்காரியின் முதுகில் மீண்டும் ஓர் அடி. அது அசையவில்லை. உழவன் அதன் வாலை முறுக்கிக் கேட்டியின் மறுபுறத்திலிருந்த ஊசியால் குத்தினான். செங்காரி மூசியது; திமிறியது; நாணயக் கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடியது. "வா...! வா...!" "உழவன் அழைத்தான். மனச்சாட்சியின் வழி காட்டலை ஏற்று நடு உழவில் நந்தை அறுத்தி மாடு ஓடிக்கொண்டேயிருந்தது. இறுதியில் அது கட்டாக்காலிகளுடன் சேர்ந்து ... டது." நான் இல்லாவிட்டால் உழவு நடுவில் நின்று விடும்." மனச்சாட்சியின்படி ஓடிய மாடு எண்ணிக்கொண்டது;

"நாளைக்கே உன்னை இறைச்சிக் காரனுக்கு விற்று விடுகிறேன்"— மாட்டின் செயலால் கோபம்கொண்ட உழவனின் ஆவேசக் குரல்; வழமையாக வலங்கையிற் பூட்டி உழும் மாட்டுடன் உழவு தொடர்ந்தது.

உழவு முடிந்தது: "நாளை விதைத்து விட்டால் எண்ணி நூறு நாட்களில் விளைந்து விடும். அதன்பிறகு மகிழ்ச்சி தான்."— இனிமையான இந்த எண்ணத்தால் உழவனின் முகத்தில் மலர்ச்சி கோடிட்டது.

## 8ம் நூற்றாண்டில்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

இறது என்று ஈழவேந்தன் இடித்துரைத்தபோது கூடியிருந்தவர்கள் உணர்ச்சி வசப்பட்டு இவர் கூற்றை ஏற்றுக்கொண்டு ... பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சி ஐந்து அரசுகள் கோரியதா? DEMAND என்பதற்கும் SUGGESTION என்பதற்கும் வேறுபாடு தெரியாதவரா மார்ட்டின்?

விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லையென்பது போல் தமிரழசுக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டபின்னும் யாழ் பா. உ. திரு. சி. எக்ஸ். மாட்டின் மீண்டும் மீண்டும் அறிக்கை விட்டு வருகிறார். தினசரிப் பத்திரிகையில் தமக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, தமது அறிக்கைகளை முக்கியத்துவம் கொடுத்து அவற்றில் பிரசுரிக்கவும் செய்து வருகிறார்.

வெறும் அறிக்கையால் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாதென்பதையும், அறிக்கையால் தமிழினத்துக்கு உரிமைகள் பெற்றுக் கொடுத்துவிட முடியாதென்பதையும் மாட்டின் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழை நீதிமன்ற மொழியாக்க வசதி செய்யும் மசோதாவை எதிர்காலத் தேசிய சபையில் "உச்ச முதன்மை" கொடுத்து கொண்டுவர இருப்பதாக அரசாங்கம் பிரகடனப்படுத்த இருந்ததாகவும் அதை ஏற்றுக்கொண்டு தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணய சபையிலிருந்து புதிய அரசியலமைப்புக்கு ஒத்துழைப்பு நல்கியிருக்க வேண்டும் என்றும் மாட்டின் கூறிவருகிறார்.

இது எப்படிப்பட்டதென்றால்—திருமணத்தைப் பின்னர் வைத்துக்கொள்வோம்; அதற்கு முன் முதலிரவை வைத்துக்கொள்வோம் என்று காளையொருவன் கூறுவது போன்றது. காளையின் இக்கூற்றை நம்பி எந்தக் கன்னிப் பெண்ணும் அதற்கு ஒத்துழைக்கவே மாட்டாள். அப்படி ஒத்துழைத்தால் அவள் பெண்மையையும் இழந்து நடுத்தெருவில் நாதியற்று நிற்கும்நிலையும் ஏற்படலாம்.

பின்னால் சட்டம் கொண்டு வருவோம் என்ற வாக்குறுதியை நம்பி இப்போது அரசியலமைப்புக்கு தமிழினம் தனது ஆதரவைக்கொடுக்க வேண்டுமென்று மாட்டின் கூறுவது— திருமணத்துக்கு முன் முதலிரவுக்கு ஒரு பெண் ஒத்துக்கொடுக்க வேண்டும் என்று கூறுவது போன்றதே.

அரசியலமைப்பிலேயே தமிழின் அந்தஸ்தும் உரிமைகளும் இடம்பெற வேண்டுமென்று கோருகிறோம் நாம். —அக்கோரிக்கையை நிராகரித்துவிட்டு—அதைப்பற்றி பின்னர் கவனிப்போம்; இப்போது, தமிழுரிமைகளை அங்கீகரிக்காத அரசியலமைப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள் என்கிறது அரசாங்கம். அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்பி, தமிழுக்கு உரிமைதராத அரசியலமைப்பை தமிழரசுக்கட்சி ஏற்க வேண்டும் என்று கூறுகிறார் மாட்டின்.

நாமோ பின்னர் சட்டம் செய்வோம் என்ற அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்பி, தமிழுக்கு உரிமை தராத அரசியலமைப்பினை ஆதரித்து, தமிழினத்தின் அரசியல் 'கற்பை' தாரை வார்க்க மறுக்கிறோம். இதை மாட்டின் தெளிவாகப் புரிந்துகொள்ளட்டும்.

எதிர்காலத் தேசிய சபையில் தமிழுரிமை வழங்குவதற்கு தனி மசோதா கொண்டுவருவது என்று ஒப்பந்தம்செய்துகொண்டு தமிழுரிமையை அங்கீகரிக்காத அரசியல் சட்டத்துக்கு இப்போது ஆதரவு தருவது— அரசியல் சட்டத்திலிருந்து தமிழை அகற்றுவதற்கு தமிழ்ப்பிரதிநிதிகளே ஒத்துழைப்பது போன்றதாகும். இதை மானமுள்ள எந்தத் தமிழனும் செய்யமாட்டான்.

## கிண்டல் செய்கிறார்

தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு மாட்டின் எழுதியுள்ள கடிதமொன்றில் தமிழரசுப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு போதிய அரசியல் தெளிவு இல்லையென்று கிண்டல் பேசியிருக்கிறார்.

ஐயா, மாட்டின் அவர்களே, உங்களைவிட தமிழரசுப் பொதுச் சபையினர் அரசியல் தெரிந்தவர்கள்; அரசியலைப் புரிந்தவர்கள்; கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டுத் தமிழினத்தின் வாழ்விலும், தாழ்விலும் பங்கு கொண்டுழைப்பவர்கள்; உங்களைப்போல மேற்தட்டு வர்க்கத்தினர் அல்லர் அவர்கள்; வியர்வை இரத்தம், கண்ணீர் சிந்தி தமிழினத்துக்காக அல்லும் பகலும் உழைத்து வருபவர்கள். உங்களைப் போல பதவி பெறுவதற்காக கட்சிக்கு வந்தவர்களல்ல அவர்கள்; தமிழரசுக் கட்சியில் சேர்ந்து அவர்கள் ஏற்றுக்கொண்ட தியாகங்களில் கால்தூசி தியாகம்கூட நீர் தமிழினத்துக்காக செய்திருக்க மாட்டீர்! தமிழரசுப் பொதுச்சபை உறுப்பினர்களின் அரசியல் அறிவை அளப்பதற்கு நீர் யார்?

## வாக்குறுதியை நம்பி 'கற்பை' இழப்பதா?

தமிழரசுக் கட்சி ஐந்து அரசுகளாக நாட்டைப் பிரிக்கும்படி கோரியதாக நீர்தான் விஷயம் புரியாமல் அலட்டிக்கொண்டு வருகிறீர்!

ஜூலியஸ் சீசரே தனது நாட்டை மூன்றாகப் பிரித்தான்; தமிழரசுக்கட்சியினர் இலங்கையை ஐந்தாகப் பிரிக்கும்படி கோருகிறார்களே — என்று உமது புதிய எஜமானர்களுக்கு கேட்கும்படி பெரிதாக சத்தமிடுகிறீரே, ஏனையா இலங்கை இப்போது ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதைக்கூட மறந்தீரா?

பிரிவினை என்னும்போது எதற்காகப் பயந்து சாகிறீர்கள்? இலங்கையைவிட சின்னஞ்சிறு நாடான சுவிட்சர்லாந்து 22 கன்டன் களாகப் பிரிக்கப்பட்டிருப்பது உமக்குத் தெரியாதா?

சரி, தமிழரசுக்கட்சி எங்கே ஐயா இலங்கையை ஐந்து அரசுகளாகப் பிரிக்கும்படி (DEMAND) கோரிக்கை விடுத்தது? தமிழரசுக்கட்சி அரசியலமைப்பு அமைச்சருக்கு கொடுத்த 'சமஷ்டி' பற்றிய நகல் திட்டத்தில் என்ன கூறியிருக்கிறது? கட்சியிலிருந்தபோது அதையாவது நீர் படித்துணரவில்லையா? இதோ இப்போதாவது படியும்:

The Draft constitution which is annexed to this memorandum is only intended as a model to be considerde in drafting a Federal constitution for Ceylon. The proposal to have five component units is only a *suggestion* for consideration. The Northern Province and the Trincomalee and Batticaloa Districts of the Eastern Province will form one unit. This will be a Tamil majority State. The Amparai District will form a Muslim majority State.

The suggestion to establish in the rest of Ceylon three states is made on Historical and economic grounds and is calculaled to enable the fruits of democratic decentralisation to be enjoyed by all sections of the people.

"We wish to repeat that this is only a tentative suggestion for the consideration of the representatives of the Sinhalese People who are free to establish their state or states on any other basis.

## எஸ்ஸாரெம்

ஐயா மாட்டின் அவர்களே, இதுதான் தமிழரசுக் கட்சி சமர்ப்பித்த நகல் அரசியல் திட்டத்தில் காணப்படுவது. மெத்தப்படித்த உங்களால், DEMAND என்பதற்கும் Suggestion என்பதற்கும் வேறுபாடு காண முடியவில்லையா?

தமிழரசுப் பொதுச்சபை, மொழிப்பிரச்சினைக்கு சட்டப்பிரமாணங்களின் மூலம் (Regulations) தீர்வு காண விரும்புகிறதே தவிர தேசிய அசெம்பிளியின் சட்ட மூலமாக தீர்வு காணத் தயாராக இல்லையென்று கூறுகிறார் மாட்டின்.

மாட்டினுக்கு இவ்விஷயத்திலும் தெளிவு இல்லையென்பது தெளிவாகிறது.

தமிழரசுப் பொதுச்சபை மொழிப்பிரச்சினைக்கு அரசியல் சட்டத்தின் மூலம் தீர்வு காணவேண்டுமென்று கோருகிறதே தவிர Regulations மூலமாகவோ தேசிய அசெம்பிளியின் சட்டத்தின் மூலமாகவோ தீர்வு காண வேண்டுமென்று ஒரு போதும் விரும்பியதில்லை என்பதை மாட்டின் அவர்களுக்கு கூறிவைக்கிறோம்.

### வழிமுறைக் குழுவில் உறுப்பினரானது எப்படி?

அரசியல் நிர்ணய சபை வழி முறைக்குழு உறுப்பினராக தம்மை நியமித்தது அரசியல் நிர்ணய சபையின் தலைவரே என்றும் அப்பதவியிலிருந்து தம்மை விலகும்படி கட்டளையிடுவதற்கு தமிழரசுப் பொதுச்சபைக்கு அதிகாரமில்லையென்றும் கூறுகிறார் மார்டின். மெத்தப்படித்த மார்டின் யாருக்கு டூப் அடிக்கிறார்?

அரசியலமைப்பு வழிமுறைக்குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டது அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் அடிப்படையிலேயே என்பதை அனைவரும் அறிவர். வழி முறைக்குழுவில் தமிழரசுக்கட்சியின் பிரதிநிதியாக மார்டினை நியமிக்கும்படி தமிழரசுக்கட்சி கேட்டுக்கொண்டதனாலேயே மார்டின் அக்குழுவுக்கு நியமிக்கப்பட்டார் மார்டின் தமிழரசுக்கட்சியிலில்லாது— இப்போது இருப்பதைப்போல சுயேச்சையாளராக இருந்திருந்தால் அவருக்குஅக்குழுவில் இடம்கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே.

எனவே தமிழரசுக் கட்சி பிரதிநிதியாக வழிமுறைக் குழுவில் நியமிக்கப்பட்ட மார்டின், கட்சி அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறியதும், கட்சியின் சார்பாக தாம்பெற்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகுவதுதான் நீதி நியாயம். மனச்சாட்சிபற்றி அடிக்கடி பேசும் மார்டினுக்கு இப்படிப்பட்ட பிரச்சினைகளில் மட்டும் மனச்சாட்சி செத்து விடுகிறதுபோலும்!

### மார்டின் ஒப்புக் கொள்ளும் உண்மை

கடைசியாக, தம்மை வேட்பாளராக நியமிக்கும்படி, தமிழரசுக்கட்சியிடம் தாம் ஒருபோதுமே கேட்டதில்லை யென்றும், டாக்டர் நாகநாதனும், திரு. செல்வநாயகமும் விடாப்பிடியாக வற்புறுத்தியதாலேயே யாழ்ப்பாணத் தொகுதியில் கட்சி வேட்பாளராகப் போட்டியிடச் சம்மதித்ததாகவும் கூறியிருக்கிறார் மாட்டின்.

அதாவது கட்சிக்கு தாம் வந்தது தேர்தலில் போட்டியிடவே தவிர, கட்சிக் கொள்கை மீது கொண்ட பற்றினாலல்ல என்பதை இப்படி மறைமுகமாக ஒப்புக் கொண்டுவிட்டார் மாட்டின்.

நாங்கள் கேட்கிறோம். பெருமகனே—மாஜி நீதிபதியே! செல்வா கேட்டுக் கொண்டார் என்பதற்காக கட்சிகொள்கையைப் படிக்காமல்—கட்சியின் இலட்சியங்களைப்புரிந்து கொள்ளாமல் — செல்வாவின் வாக்கையே வேதவாக்காகக் கொண்டு நீர் கட்சியில் சேர்ந்திருந்தால், இன்று அதே செல்வா தமது தள்ளாத வயதிலும் உமது வீடு தேடி ஒரு தடவைக்கு பல தடவை வந்து — கட்சிக்கு துரோகமிழைக்காதீர்; இனத்தின் ஒற்றுமையை பாழடிக்காதீர்—என்று வற்புறுத்திக் கேட்டாரே அப்போது மட்டும் செல்வாவின் வாக்கு உமது திருச்செவியில் ஏற மறுத்துவிட்டதே அது ஏன்?

செல்வா மீது நம்பிக்கை வைத்து கட்சியில் சேர்ந்ததாக கூறும்மார்டின்இன்றும் அதே செல்வாவின் மீது நம்பிக்கைவைத்து-செல்வாவின் கட்டளையை ஏற்று—கட்சியின் தீர்மானத்துக்கு கட்டுப்பட்டு— அரசியல் நிர்ணய சபையையும் பகிஷ்கரித்திருக்கலாமே, ஏன் அப்படிச் செய்யவில்லை?

மெத்தப்படித்தவரான மார்டின், ஓர் அரசியல் கட்சியில் சேரும்போது, அதன் கொள்கைகளைப் படித்து அதில் சேராமல்—அக்கட்சியின் கொள்கைகள் ஏற்றுக் கொள்ளத்தக்கனவா என்று தமது மனச்சாட்சியைக் கேட்காமல்—செல்வா என்ற தனி மனிதரின் வில்லங்கத்துக்காக சேர்ந்தேன் என்று கூறுகிறாரென்றால், அவரை அரசியலறிந்த மனிதர் என்று எப்படி ஒப்புக் கொள்ளமுடியும்?

### ரொம்ப நன்றி

இறுதியாக ஒன்று—தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதால் எம். பீ. பதவியை விட்டு தாம் விலகப்போவதில்லை யென்று கூறி அதற்கு பல உதாரணங்களை கஷ்டப்பட்டு தேடியிருக்கிறார் மார்டின்.

ஐயா மார்டின் அவர்களே, எம். பீ. பதவியை விட்டு விலகவேண்டுமென்று உம்மிடம் நாங்கள் கோரிய போது—நீர் அதைச் செய்வீர் என்று எதிர்பார்த்து அப்படிக் கோரவில்லை. கிடைத்தபதவியை கெட்டியாகப்பிடித்துக்கொள்ளுவீர் என்பது எங்களுக்குத் தெரியும். உம்மிடம் மனச்சாட்சியென்று ஒன்று இல்லையென்பதை எடுத்துக்காட்டவே ராஜினமா செய்யும் படி கோரிக்கைவிடுத்தோம். நாம் எதிர்பார்த்தது போலவே பா. உ. பதவியை ராஜினமா செய்ய முடியாது என்று கூறி மனச்சாட்சியென்று ஒன்று உம்மிடம் இல்லையென்பதைக்காட்டி விட்டீர்; ரொம்ப நன்றி!

பெரிய மனிதர்கள் என்று கூறப்படுபவர்கள் எல்லோரும் பெரிய மனிதர்களாவதில்லையென்பதற்கு மாட்டின் ஓர் எடுத்துக்காட்டாகி விட்டார்.

---

## தனிச் சிங்களச்...

(6ம் பக்கத்தொடர்ச்சி)

காட்டி அவர்களை அந்தப் பாதையிற் பாடுபடச்செய்ய வேண்டும் என்று அவர்கள் உழைத்தார்கள்.

லெனினைப் பொறுத்தவரையில் அவர் எத்தனையோ தீவிரமான போராட்டங்களை நடத்தி மக்களைத் தம் வசப்படுத்தினார். மக்களைச் சரியான பாதையில் போகச் செய்தார். ருஷ்யாவுக்குத் தனி ஒரு பாஷை இருக்கக் கூடாது. சிறுபான்மை இனங்களின் பாஷைகள் அத்தனையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவற்றுக்குத் தகுந்த இடம் கொடுக்க வேண்டும் என்று கட்டுரைகள் எழுதினார்.

அந்நேரத்தில் எல்லாம்— இலங்கைத் தமிழரசுக்கட்சி 1958 ஆம் ஆண்டு விடுத்த பிரகடனத்தில் கூறியதைப் போல — சுவிச்சர்லந்து தேசத்தைத்தான் அவர் முன் மாதிரியாக எடுத்துக் கூறினார். நான்கு மொழிகளுக்குச் சம இடம் கொடுத்ததால் சுவிச்சர்லாந்து பிரிந்து விடவில்லை என்பதை லெனின் மக்களுக்கு விளக்கமாக எடுத்துக்காட்டி, மக்களைச் சரியான பாதையில் நடத்தினார். எங்களைப் பொறுத்தவரையில்சிங்களத் தலைவர்கள் சுலபமான வழியில் அதிகாரத்தைப் பெறும் நோக்கத்தை வைத்திருந்தார்களே தவிர நியாயத்தை, நீதியை மக்களுக்கு விளக்கி சிறந்த, வழியில் மக்கள் செல்ல வேண்டுமென்ற கருத்தை வைத்திருக்கவில்லை. அதனால்தான் இந்தப் பிரச்சினை ஒரு தீராத பிரச்சினையாக இவ்வளவு காலமும் இருந்து வருகின்றது என்பதை நாம் உணர வேண்டும்.

(தொடரும்)

## தினபதியாரே,...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பதியாரது அப்பனாலும் முடியாது."


—இவ்வாறு மூதூர் பா. உ. திரு. தங்கத்துரை அவர்கள் சுதந்திரன் நிருபரிடம் ஆக்ரோஷமாக தெரிவித்தார்.

(அவர் தெரிவித்த மூதூர் தொகுதியில் நடைபெற்ற தராதரபத்திரமற்ற ஆசிரியர் நியமனம் சம்பந்தமான முழு விபரங்களையும், அடுத்த வார சுதந்திரனில் காண்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18-ம் திகதி முதல்
லிடோ—வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

கெப்பிட்டல்-பிளாசா



நடிகர்திலகம் பத்மஸ்ரீ
**சிவாஜி கணேசன்**

மூன்று மாறுபட்ட வேடங்களில் நடித்து **ஆஸ்கார்** பரிசுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்ட முதல் தமிழ்ச் சித்திரம். தென்னகத் திரைகளில் மாபெரும் சாதனையை நிலைநாட்டியது

மற்றும் ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார் நடித்த

சாந்தி பிலிம்ஸ்

# தெய்வ மகன்

டைரக்ஷன்
A- C- திருலோகசந்தர்


---

# 3வது வாரமாக காட்சிதருகின்றது

**சென்ட்ரல்** (மருதானை) 10, 2, 6. மணிக்கு

ராணி (யாழ்நகர்)

ராஜேஸ்வரா (மட்டுநகர்)



சுந்தரராஜன்
சௌகார்ஜானகி
சிவகுமார்
லட்சுமி
கள்ளபாட் நடராஜா
ராதிகா
டி. ஆர். ராமச்சந்திரன்
—நடித்த—

# திலகம் கஸ்தூரி

---

# 2வது வாரம் ஜனத்திரள் நிறைந்த காட்சிகளுடன் காட்சியளிக்கின்றது

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை)

**கிறவுண்** (மருதானை)

**வின்சர்** (யாழ்நகர்)

**இம்பீரியல்** (மட்டு நகர்)

மக்கள்திலகம் எம். ஜி. ஆர்., வாணிஸ்ரீ, நாகேஷ்,

எஸ். ஏ. அசோகன், எம். என். நம்பியார், ஜோதிலட்சுமி —நடித்த—

தமாஸ் பிக்சர்ஸ் அளிக்கும்

# தலைவன்

டைரக்ஷன்:- தமாஸ் சிங்கமுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1971-ம் வருடம் ஆவணி மாதம் 15-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்